# எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI

குரல் 07 அதிர்வு 77 கார்த்திகை 2023 editor@ethiroli.com தொ.பே:1800 960 162


















ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

# ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

## நாணயமிக்க பணப்பரிமாற்றம்
## ‘டன்டிநொங்’ இல்
## புதியதோர் சேவை

BOC இலங்கை வங்கி

PEOPLE'S BANK

COMMERCIAL BANK

HNB

Sampath Bank சம்பத் வங்கி

UNION BANK

Amãna Bank It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403

royalinfomoney@gmail.com


KUMARAN'S
Cafe
Enjoy the South Indian Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au
www.srikumaran.com.au

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



# இல்லை என்பது தீர்ப்பு அல்ல, அநீதி

பரியேறும் பெருமாள் திரைப்படத்தின் இறுதிக்காட்சியில் ஒரு வசனம் வரும். கதா நாயகியின் தந்தை "பார்க்கலாம் , நாளைக்கு எதுவேணாலும் எப்படி வேணாலும் மாறலாம் இல்லையா" என்று சொல்வார் .

அதாவது காலம் மாறினால் வர்க்க ஒடுக்கு முறைகள் எல்லாம் சரியாகிவிடுமென்று. அதற்கு கதாநாயகன் பரி, "நீங்கள் நீங்களாக இருக்கிறவரைக்கும், நான் நாயாகத்தான் இருக்கவேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க் கிறவரைக்கும் இங்க எதுவுமே மாறாது, இப்படியே தான் இருக்கும்" என்று பதில் சொல்வான். இதை விட இங்குள்ள வர்க்க, சாதிய பேதங்களை தெளிவாக உக்கிரமாக சொல்ல முடியாது. சென்ற ஒக்ரோபர் மாதம் நடைபெற்ற பூர்வகுடிகளின் குரலுக்கு நடைபெற்ற வாக்கெடுப்பின் முடிவும் இதைத்தான் சொல்லாமல் சொல்கிறது. அடிமைப்பட்டு ஏறக்குறைய இருநூறு வருடங்களாகியும் அடக்குமுறைகளும், நிறவெறியும் மாறிவிடும் என்ற நம்பிக்கையை இந்த வாக்கெடுப்பின் முடிவு தவிடுபொடியாக்கிவிட்டது. இங்கே எதுவுமே என்றும் மாறப்போவதில்லை என்பதை நாம் 60 சதவிகி தம் பூர்வகுடிகளின் குரலுக்கு ஆதரவு இல்லை என்பதற்கு கிடைத்திருப்பதன் மூலம் அறிய முடிகிறது.

பொதுத்தேர்தலில் வாக்களிப்பது எப்படி கட்டாய மாக்கப்பட்டுள்ளதோ அதே போன்று வாக்கெடுப்பில் (referendum) வாக்களிப்பதும் கட்டாயமாகும். 1906 முதல் 2023 ஆம் ஆண்டு வரை 45 தடவை நாடு தழுவிய வாக்கெடுப்புகள் நடத்தப்பட்டுள்ளன, அவற்றில் எட்டு மட்டுமே வெற்றி பெற்றுள்ளன. அந்த எட்டில் ஒன்றைத் தவிர மற்ற அனைத்திற்கும் இரு கட்சிகளின் ஆதரவு இருந்தது. அந்தோனி அல்பானிஸ் அரசியலமைப்புத் திருத்தம் மற்றும் பொது வாக்கெடுப்பிற்கான கேள்வியின் இறுதி வடிவத்தை மார்ச் மாதம் வெளியிட்ட பின்னர், இந்த ஆண்டின் பிற்பகுதி யில் நடைபெறும் வாக்கெடுப்பில் நாட்டின் முதல் மக்களான பூர்வகுடிகளை அங்கீகரிக்குமாறு ஆஸ்திரேலியர்கள் கேட்கப்படுவார்கள் எனவும் தெரிவித்தார். அவ்வாறு அறிவித்த பின்னர் எதிர்க்கட்சி கூட்டணியினர் ( லிபரல், நேஷனல் ) பொதுவான விவரணைகள் இல்லை எனவும், இது நாட்டை பிளவுபடுத்தும் எனவும் தெரிவித்து குரலுக்கு எதிர்ப்பு தெரிவிப்போம் என்று தெரிவித்தனர். பிரதமர் அறிவிப்பிற்கு பிறகு எடுத்த கருத்துக்கணிப்பில் ஆம் என்பதற்கு ஆதரவாக 65 சதவிகிதம் மக்களும் , 35 சதவிகிதமானோர் இல்லை எனவும் தெரிவித்திருந்தனர். ஆனால் கடந்த ஆறு மாதங்களில் இந்த நிலை படிப்படியாக மாறி 60 சதவிகி தம் மக்கள் பூர்வகுடிகளின் குரலுக்கு எதிர்ப்பு தெரிவித்து நிராகரித்திருக்கின்றனர் . இந்த நிலைமைக்கு என்ன காரணம் என்பதை ஆராயும் கடமை நமக்கிருக்கிறது .

உலகெமெங்கிலும் அதிகமாக எதிர்பார்க்கப்பட்ட குரல் வாக்கெடுப்பு ஏன் தோல்வி அடைந்தது என்பதற்கு பல காரணங்களிருப்பினும் மிக முக்கியமாக ஏழு காரணங்களைக் கூறலாம்.

1. அனைத்து கட்சிகள் (முக்கியமாக எதிர்க்கட்சி) ஆதரவின்றி களத்தில் இறங்கியது
2. குரல் பற்றிய தெளிவான விளக்கமின்மை
3. ஆம் தரப்பு பல்வேறு குழுக்களாக இயங்கியது
4. ஆம்" தரப்பில் வெற்றி பெற ஒரு வாதமே, மாறாக இல்லை தரப்பிற்கு பல்வேறு வாதங்கள்
5 . சராசரி வாக்காளருக்கும் ஆம் குழுவினருக்கும் இடையே மாபெரும் இடைவெளி
6. சாதாரண மக்களை பயமுறுத்த புறப்பட்ட தவ றான செய்திகள்
7. தெளிவான சட்ட வரையறை இன்றி குரலுக்கு ஆதரவு கோரியது

முதல் காரணமான எதிர்க்கட்சி ஆதரவின்றி வாக்கெ டுப்பு களத்தில் இறங்கியது மிகப்பெரிய தவறென்றே சொல்ல முடியும் .இதுவரை இருகட்சிகள் ஆதரவின்றி வாக்கெடுப்புகள் ( ஒன்றைத் தவிர ) வெற்றி பெற்றதில்லை . பூர்வகுடிகளின் தலைவரும் மற்றும் 24 நபர் அடங்கிய குரல் அமைப்பினை வடிவமைத்த வல்லுநர்களில் ஒருவரு மான மிக் கூடா ( Mick Gooda ) மற்ற பூர்வகுடிகளின் தலைவர்களை குரலுக்கான சட்டதிட்டங்களில் சமரசம் செய்து எதிர்க்கட்சிகளின் ஆதரவைப் பெறவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார். அவ்வாறு அவர்கள் பீட்டர் டட்டனிடம் ஒப்பந்தம் செய்து சமரசம் செய்திருந்தால் முழு ஆதரவுடன் வெற்றி பெற்றிருக்க முடியும். அதுமட்டுமின்றி பூர்வகுடிகளுக்கிடையே ஒற்றுமை இல்லாததை வழக்கம் போல் பிரித்தாள்மை சூழ்ச்சி செய்து ( வடக்கு மாகாண செனட் தலைவர் ஜெசிந்தா பிரைஸ் உட்பட பல தலைவர் களை) பூர்வகுடிகளின் வாக்குகளை குரலுக்கு எதிராக திருப்பியதும் தோல்விக்கு காரணமே.

இரண்டாவது மிக முக்கியமான காரணம் குரல் பற்றிய தெளிவான விளக்கமின்மை. படித்த பல்வேறு உயர்பணிகளில் இருக்கும் பலருக்கே எதற்காக ஆம் என்று வாக்களிக்க வேண் டும் என்ற தெளிவின்மை. பல மாதங்கள் ஆம் அணியினர் பிரசாரம் செய்த பிறகும் ஆஸ்திரேலியர்களில் கணிசமான பகுதியினருக்கு உண்மையில் குரல் பற்றிய தெளிவான புரிதலை கொண்டுவரமுடியவில்லை. அப்படியே புரிந்து கொண்டவர்களும் இது ஒன்றும் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தாது என்ற அளவிலேயே இருந்தது. எதிர்க்கட்சியினர் இதை சாதகமாக்கி கொண்டு " உங்களுக்கு தெரியவில்லை அல்லது புரிந்து கொள்ள முடியவில்லை என்றால் இல்லை என்று வாக்களியுங்கள்" என்ற பிரசாரம் செய்தது வாக்கெடுப் பின் மாபெரும் தோல்விக்கு ஒரு காரணமாகும்.

ஆம் அணியானது ஒரு தெளிவான உத்தி மற்றும் அதற்கான திட்டமிடல்கள் இல்லாமல் இயங்கியது. அதுமட்டுமின்றி ஒரு மையத் தலைமையின்றி பல்வேறு குழுக்களாக இயங்கியதும் தோல்விக்கான காரணமே. குறிப்பாக சமூக ஊடகம் மூலம் எவ்வாறு பிரசாரம் செய்வது என்ற தெளிவான திட்டமிடல் இல்லாமல் பல ஆயிரம் டொலரை விரயம் செய்தனர். ஆனால் எதிர்க்கட்சியினரோ மிகத் தெளிவான திட்டத்துடன் இலக்கு நோக்கிய சமூக



ஊடக விளம்பரம் செய்தனர் . முகநூல் ஊடகத்தில் பல்வேறு பக்கங்களை ஏற்படுத்தி இலக்கு நோக்கிய தெளிவான பிரசாரம் செய்தனர். அவர்கள் நியூ சவுத் வேல்ஸ் மற்றும் விக்டோரியா மாகாணங்களை தவிர்த்து மற்ற மாநில மக்களை நோக்கிய பிரசாரத்தை முடுக்கிவிட்டனர். ஆம் அணியி னர் நமக்கு படித்தவர் ஆதரவு இருப்பதால் பெருவாரி யான வாக்குகள் விழுந்துவிடும் என்று தப்புக்கணக்கு போட்டதும் உத்தியின் பிழைக்கு காரணமே.

ஆம்" தரப்பில் வெற்றி பெற ஒரு வாதமே இருந்தது மாறாக இல்லை தரப்பிற்கு பல்வேறு வாதங்கள் இருந்ததும் மக்களை திசைதிருப்ப மிக எளிதான காரியமாக அமைந்துவிட்டது. ஆம் தரப்பிற்கு பூர்வகுடிகளின் குரல்வெற்றி அவர்களது வாழ்க்கையை மேம்படுத்தும். "இல்லை" தரப்பு நான்கு தனித்தனி வாதங்களை முன்வைத்தது. அதாவது 1. போதிய விளக்கமில்லை 2. மக்கள் பணவீக்க உயர்வினால் கடும் நெருக்க டிக்கு ஆளாகும் இந்த தருணம் வாக்கெடுப்புக்கான நேரமல்ல 3. குரல் ஆஸ்திரேலியாவின் சமத்துவக் கொள்கையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது 4. அதுமட்டுமின்றி சர்ச்சைக்குரிய வகையில் "முதல் ஆஸ்திரேலியர்கள்" என்ற கருத்தே குறைபாடுடையது. இந்த பல்வேறு காரணங்களை அடித்தளமாகக் கொண்டு பல்வேறு தவறான செய்திகளைப் பரப்பி விட்டனர். பல்வேறு அடித்தள வெள்ளையின மற்றும் புலம்பெயர்ந்த மக்களிடையே பூர்வகுடிகள் வாழ்க்கையை மேம்படுத்துவதில் நமக்கு என்ன ஆதாயம் என்பதே முதல் கேள்வியாக இருந்தது . இந்த மனநிலையும் தோல்விக்கான முக்கியமான காரணம்.

சராசரி வாக்காளருக்கும் ஆம் குழுவினருக்கும் இடையே மாபெரும் இடைவெளி. ஆஸ்திரேலியா பொதுவான வாக்காளர்கள் பூர்வகுடி விவகாரங்கள், இனவெறி மற்றும் சுற்றுச்சூழலுக்கு எதிராக பொருளா தாரத்தில் அதிக அக்கறை கொண்ட ஆஸ்திரேலியாவின் மற்ற பகுதிகளுடன் ஒப்பிடும்போது இந்த அக்கறை இடத்திற்கிடம் மாறு படுகிறது. அதுமட்டுமன்றி அல்பனீஸ் தான் வெற்றி பெற்ற காலத்தின் மனநிலை யில் வாக்காளர்கள் இருப் பார்கள் எனவும் மற்றும் தொடர்ந்த எல்லா மாகாண தேர்தல்களிலும் லேபர் கட்சி யின் வெற்றியும் இந்த குரலுக்கு பெருவாரியான வெற்றி தரும் என கருதிய தும் ஒரு காரணமே. அது மட்டுமன்றி ஆம் தரப்பு தெற்கு,வடக்கு ஆஸ்திரேலியா மாநிலங்களில் பெருவாரியான மக்களின் அணுகுமுறைக்கு எதிராக இயங்கும் தொழிலாளர் தரப்பின் வாக்குகளை பெரிதும் நம்பியிருந்தது.



**ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி**

சாதாரண மக்களை பயமுறுத்த பரப்பப்பட்ட தவ றான செய்திகளின் தாக்கம் மிக அதிகம். எவ்வாறு டொனால்ட் டிரம்ப் மற்றும் பிரெக்ஸிட் (BREXIT) என்பவற்றை பொய்யான பிரசாரங்கள் மற்றும் தவறான தகவல்கள் பொதுமக்களின் மனதை மாற்றி முடிவை மாற்றின என்று நாம் பார்த்திருக்கிறோம் அல்லவா. தவறான தகவலைப் பரப்பியதற்காக ஊடகங்கள் குற்றம் சாட்டப்பட வேண்டி யவை, ஆனால் அந்தத் தவறான தகவலை உருவாக்கிய வர்கள் மாபெரும் துரோகிகள். அதாவது இந்த வாக்கெடுப்பு வெற்றிபெற்றால் ஆஸ்திரேலியர்கள் வீடுகளின் உரிமையை இழப்பார்கள், பூர்வகுடிகளின் குரல் சட்டரீதியாக ஆபத்தா னது, தேசத்தைப் பிரிக்கும், உளூரு போன்ற ஒப்பந்தங்களை கட்டாயப்படுத்தும் மற்றும் ஐ.நா. சபை ஆஸ்திரேலியா வைக் கைப்பற்றிவிடும் என்று பலவிதமான கட்டுக் கதைகள் எதிர்கட்சியினர் டிரம்ப் பாணியில் பரப்பினர் பொது வாக லிபரல் கூட்டணி எப்போதும் செய்வதையே பீட்டர் டட்டன் இப்போதும் செய்தார்: அதாவது அரசியல் ஆதாயம் அடைய மற்றவர்களின் துன்பத்தைப் பகடைக்காயாக பயன்படுத்துவது. அவர்கள் இதற்கு முன்னர் புகலிடக் கோரிக்கையாளர்கள் மற்றும் சென்டர்லிங்க் பெறுநர்களுக்கு எதிராக பயன்படுத்தினார்கள் .ஆனால் இந்த முறை அவர்கள் பூர்வகுடி மக்களுடன் இணைந்து செய்தார்கள். இந்த பயமுறுத்தி வெற்றி பெரும் உபாயத்தை பிரசாரங்களை எல்லாம் அடுத்த தேர்தலுக்கான நடைமுறையாக இந்த முறை மிக வெற்றிகரமாக நடத்தி காட்டியிருக்கிறார் டட்டன்.

அல்பானீஸ் செய்த மற்றோர் பிழை தெளிவான சட்ட வரையறையின்றி பூர்வகுடிகளின் குரலுக்கு ஆதரவு கோரியது. பூர்வகுடிகளின் குரல் வடிவமைப்பில் வரைவு சட்டத்தை உருவாக்க வேண்டாம் என்று அரசாங்கம் முடிவு செய்து மிக அவசரமாக வாக்கெடுப்பு நடத்தியது தான் தோல்விற்கான காரணமென்று 'மிக் கூடா' வருத்தத்துடன் கருத்து தெரிவித்திருக்கிறார் . வரைவு சட்டம் இல்லாத காரணத்தை காட்டி டட்டன் கும்பல் பல்வேறு பொய்மைச்செய்திகளை பரப்புவதற்கு ஏதுவாக அமைந்துவிட்டது.

குரல் தோல்வியடைந்தாலும் இன்னும் தீர்க்கப்பட வேண்டிய பல சிக்கல்கள் உள்ளன. பூர்வகுடி மக்களில் கைதிகளாக சிறையிலிருப்பவர்கள் விகிதாசாரம் மற்ற இன மக்களுடன் ஒப்பிடுகையில் அதிகம் . அதே போன்று காவலில் இறக்கும் விகிதம் வெள்ளை மற்றும் ஏனைய புலம் பெயர்ந்த சமூகத்தை விட மிக அதிகமாக உள்ளது. பழங்குடி ஆஸ்திரேலியர்கள் வெள்ளையர்களைப் போல நீண்ட காலம் வாழ்வதில்லை, சராசரி ஆயுட்காலம் எட்டு ஆண்டுகள் குறைவாக உள்ளது. NSW மாகாணத்தில், பழங்குடியின இறுதியாண்டு உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் HSC தேறும் விகிதம் 2017இல் 46 சதவீதத்திலிருந்து 2020இல் 45 சதவீதமாகவும், 2021இல் 43 சதவீதமாகவும் பின்னோக்கிச் சென்றுள்ளது. இதே நிலைதான் மற்ற மாகாணங்களிலும். இந்தக் குறைகளைக் களைய தொலைநோக்கிய திட்டங்கள் வேண்டும். இந்தத் திட்டங்களையெல்லாம் பூர்வகுடி இனத்தலைவர்களுடன் கலந்தாலோசித்து முடிவெடுக்கவேண்டும். ஏனென்றால் அவர்கள்தான் இந்த மண்ணின் மைந்தர்கள் .அவர்களுக்கு "இல்லை" என்று கைவிரிப்பதற்கு நாம் யார் ? . நமக்கு என்ன உரிமை இருக்கிறது.

# Sai Shree Foods
Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

எதிரொலி ETHIROLI ஆஸ்திரேலியா
குரல்:07 அதிர்வு: 76 கார்த்திகை 2023 தொ.பே:1800960162

## எருதுகளுக்கு விருதுகள்?

எமது தொலைபேசியில் ஒரு அழைப்பு வந்தது. 'நீங்களும் விருது கொடுக்கத் தொடங்குங்களேன்?" என்று அக்குரல் கேட்டது.

விருது கொடுக்கும் வியாதியொன்று இன்று தமிழ் கூறும் நல்லுலகைப் பீடித்துக் கொண்டுள்ளது. இந்தக் 'கொரோனா' துரித கதியில் பரவி வருகிறது.

இப்பொழுதெல்லாம் காலையில் முகநூலைத் திறந்தால், யார் யாருக்கு விருது கொடுத்திருக்கிறார்கள் என்ற செய்தி தானே முதலில் வருகிறது. பொன்னாடை இதில் ஒரு பாகம். இலங்கை, இந்தியாவிலிருந்து கனடா வரை, ஆஸ்திரேலியா விலிருந்து இங்கிலாந்து வரை, எல்லா நாடுகளிலும் விருது வழங்கும் வள்ளல்கள் தோன்றிவிட்டார்கள். அமைப்புகள் அல்லது அமைப்புகளின் 'லேபலில்' தனிப்பட்டவர்கள் இதைச் செய்கின்றனர். இப்படியொரு திடீர் 'பெருந்தன்மையும்', 'சமூக அக்கறையும்' ஏற்படுவதற்கான 'குறுக்குவழிக்' காரணங் கள் தான் என்ன?

ஒன்று, 'இதற்குச் செலவில்லை. யாரும் இலகுவாகச் செய்யலாம். நாமும் செய்வோம்' என்னும் சில்லறை மனோ பாவம். இரண்டாவது, இன்னொருவரைப் பெருமைப்படுத்தும் பாவனையில், தமக்குப் பெயர் தேடிக் கொள்ளும், அல்லது, 'தம்மைத் தாமே பெரிய மனிதராகக்' கற்பனை செய்து கொள் ளும்' உளப்பாங்கு. மூன்றாவது, இதையே வியாபாரமாக்கி, விளம்பரமாக்கிப் பணம் தேடும் 'கெட்டித்தனம்'. அவரவர் தத்தமது "தேவை"யைப் பொறுத்து, இச் "சேவை"யில் தம்மைத் தாமே ஈடுபடுத்திக் கொள்கின்றனர்.

மேற்கண்ட மூன்று வகையிலும் அடங்காமல், சமூகத்தி லுள்ள உயரிய திறமைகளையோ சேவையையோ கௌர விக்க வேண்டும் என்னும் தூய எண்ணம் கொண்ட உன் னதமான அமைப்புகள் உலகில் பல உள்ளன. உதாரணத்துக் குக் கூறக்கூடிய ஒன்று, பலருக்கும் தெரிந்த "புக்கர் பரிசு". ஒவ்வொரு ஆண்டும், ஆங்கிலத்தில் வெளிவந்த மிகச் சிறந்த நாவலை எழுதிய எழுத்தாளர் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கௌர விக்கப்படுகிறார். பரிசுத் தொகை சுமார் 95 ஆயிரம் ஆஸ்தி ரேலிய டொலர். கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக இது நடக்கிறது. 2022ல் பரிசு பெற்றவர் ஒரு இலங்கையர். ஆண்டு தோறும் நூற்றுக்கணக்கான புத்தகங்களைப் பரிசீலித்து, மிகக் கவனமாகவும் கச்சிதமாகவும் நடைபெற்று வரும் பணி விருப்பு வெறுப்பற்ற, பணத்துக்கு விலை போகாத நடுவர்கள் இதுவே கற்றோர்க்கு அழகு.

இதை விட்டுவிட்டு, ஆழமான எந்த ஆய்வுமில்லாமல், 'அவர், இவர்' எனத் தமக்கு இதமானவர்களைப் பொறுக்கி எடுத்துவிட்டு, "இதோ பாருங்கள், எங்கள் முத்துகள்" எனப் பிரசாரப்படுத்தி, பொதுமக்களையே முட்டாள்களாக்கும் செயல் அருவருக்கத்தக்கதாகும். இது இன்று பரவலாக எம் மத்தியில் நடக்கிறது. இவர்கள் காசத்தைக் காட்டி, பஞ்சவர் ணக் கிளி என்கிறார்கள். இந்த 'மலிவு விற்பனை' மிக ஆபத் தானது. ஏனெனில், தகுதியற்றவர்களையும், பண்பற்றவர் களையும் முன்னுதாரணமாகக் காட்டுவது, மற்றவர்களையும் அவர்கள் போல் ஆகுங்கள் என்று சொல்வதற்கு ஒப்பாகும்.

விருது பெறுபவர், ஒரு முன்னுதாரணத்துக்கு உரியவராக வும், எல்லோரும் மதிக்கத்தக்கவராகவும் இருக்கவேண்டு மென்பதில் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது. குறிப்பாக, சேவைக்காக ஒருவருக்கு விருது வழங்கும் போது, அவரது வரலாறு கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். முந்த நாள் செய்த பாதகச் செயல்களை அடிப்பெட்டிக்குள் போட்டுவிட்டு, நேற்றுச் செய்த "மகத்தான சேவையென" எதையோ காட்டி ஒருவரைக் கௌரவிப்போமானால், அது சமூகத்தையே ஏய்ப்பதாகும். உரிய ஆய்வுகளைச் செய்ய நேரமில்லாதவர் களுக்கு, இதற்குள் இறங்க உரிமை கிடையாது.

இவை இவ்வாறிருக்க, விருது பெறுபவரின் நிலைப்பாடு என்ன என்பது அடுத்து வரும் கேள்வியாகும். இவர்களும் பலவிதம். "எப்பொழுது எனக்கு முன்னால் இந்த எலும்புத் துண்டு வந்து விழும்?" என்று 'வீணீர் வடித்துக்' காத்திருப்போர் ஒரு வகை. விருதுக்காக, விருது வழங்குவோரின் கால் கழுவி, முதுகு சொறிந்து, கூனிக் குறுகி நிற்போர் இரண்டாவது வகை. விருது கிடைத்த பின்னர், 'தம்மை விட்டால் ஆளில்லை' எனத் தலை வீங்கித் திரியும் மாரித்தவளைகள் மூன்றாவது வகை. "விருதா? விரும்பித் தருவதெனில் தாருங்கள். எனக்கிது பெரிதல்ல" எனக் கூறி, தன்னடக்கத்துடன் தம் பணி தொடர் வோர், நான்காவது வகை. "விருதா? வேண்டவே வேண்டாம். மிக்க நன்றி" என, விருதுகளையே முற்றாக ஏற்க மறுத்து, எம்மை வியப்பில் ஆழ்த்துவோர் ஐந்தாவது வகை. இதில் எல்லா வகையினரும் எம்மிடையே இருக்கிறார்கள்.

விருது கொடுப்போரைப் பற்றிச் சொன்னோம். விருது பெறுவோரைப் பற்றியும் சொன்னோம். தொப்பியை அவரவர் தெரிந்தெடுத்துப் போட்டுக் கொள்ளலாம். ஆயினும், விருதுகள் எருதுகளைப் போய்ச் சேரக்கூடாது என்பதில் சமூகம் மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

# அரசு செய்ய நினைத்ததை தாமே செய்து முடித்த புலம்பெயர் அமைப்புகள்

● சுகந்தன்

இலங்கை அரசுக்கு இப்போதும் பெரும் தலையிடியாக இருப்பது காணாமலாக்கப் பட்டோர் விடயம்தான். இலங்கையில் தமிழர்கள் 1980ஆம் ஆண்டிலிருந்து வலிந்து காணாமலாக்கப்பட்டிருக்கிறார்கள். இனவன்முறைகள், இனக்கலவரங்கள், படுகொலைகள், இடப்பெயர்வுகள், இராணுவ சுற்றிவளைப்புகள், வெளி நாட்டுப் பயணங்கள், வெள்ளைவான் கடத்தல்கள், இறுதிப் போர்வேளையில் நிகழ்ந்த சரணடைவுகள் - கையளிப்புகள், போருக்குப் பின்னர் பேருந்துகளிலிருந்து இறக்கிக் கடத்தப்பட்டவர்கள் என வலிந்து காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் பல. இவ்வாறு இராணுவத்தினாலும், இராணுவத் துணைக்குழுக்களாலும், இனந்தெரியாத ஆயுததாரிகளாலும் கடத்தப்பட்ட எவருமே திரும்பிவர இன்னல்களைத் தம் பிள்ளைகளைத் தேடும்தாய்மார்எதிர்கொண்டிருக்கின்றனர். அரச புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல்கள், விசாரணைகள், வழக்குகள், வறுமை, நோய், பசி, இறப்புகள் என அவர்கள் கடந்திருக்கும் வலி எந்த மனித சமூகமும் இதுவரை எதிர்கொள்ளாதது. இந்த வலியோடும், தம் போராட்டத்தின் வழியாகத் தாம் தேடியலைபவர்கள் வீடு வருவார்கள் என்கிற நம்பிக்கையோடு இதுவரை 190 பேர் இறந்துவிட்டனர். இவ்வளவு வலிகளுக்கும் மேலாக இப்போது காணாமலாக்கப்பட்டவர்களைத் தேடும் உறவுகளுக்கு வந்திருக்கிறது இன்னொரு தலைவலி.

வடக்கு, கிழக்கு மாவட்டங்களைத் தனித்தனியாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் காணாமலாக்கப்பட்டோர் சங்கங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு புலம்பெயர் அமைப்புக்களின் கைகளில் சிக்கியிருக் கின்றன. சில சங்கங்கள் அமைப்புக் களிடமும், சில சங்கங்கள் தனிநபர்களிடமும் சங்கங்களின் தலைவிகளாக இருந்து நிர்வாகக் காரியங்கள் செய்யும் சிலர் மிக நீண்டகாலமாகத் தாமே பதவியில் இருக்கின்றனர். வெளிநாட்டுப் பயணங்கள் அனைத்தையும் தமக்குள்ளேயே வைத்தி ருக்கின்றனர். காணாமலாக்கப்பட்ட வர்களின் உறவுகள் அனைவருக்குமே உலகிடம் சொல்ல பல வலிசுமந்த கதைகள் இருப்பினும், வெகு சிலரின் கதைகள் மாத்திரமே ஊடகங்களிடம் திரும்பத் திரும்ப வெளியிடப்படுமளவுக்கு செல் வாக்குமிக்கவர்களாக மாறிவிட்டனர். பாதிக்கப்பட்ட ஏனையவர்களின் கதை களை ஊடகங்கள் அறிந்துகொள்ளவும் தடை ஏற்படுத்துகின்றனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு முறைப் படியான பதில்களை வழங்காத அந்தத் தலைவிகள், எதிர்த்துக் கேள்வி கேட்பவர்களை துரோகிகள் என்கின்றனர். இராணுவத்தோடு சேர்ந்து இயங்குபவர்கள் என்கின்றனர். பொதுவெளியில் தாக்கு கின்றனர். கடந்த செப்ரெம்பர் மாதத்தில் முல்லைத்தீவில் இடம்பெற்ற போராட்டம் ஒன்றில் முல்லைத்தீவு மாவட்ட காணாம லாக்கப்பட்டோர் சங்க தலைவி, கிளி நொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களிலிருந்து சென்றவர்களினால் தாக்கப்பட்டார். மானபங்கப்படுத்தப்பட்டார். அதன்விளை வாக கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்ற சர்வதேசவலிந்து காணாமலாக்கப்பட்டோர் தினத்தைப் பாதிக்கப்பட்ட பலர் புறக் கணித்திருந்தனர்.



அந்தப் போராட்டத்தின் பின்பு, துரோகிகளாகவும், இராணுவத்தோடு சேர்ந்து இயங்குபவர்களாகவும் விமர் சிக்கப்பட்ட தாய்மார்கள், கடந்த வாரம் வவுனியாவில் கூடி வடக்கின் ஐந்து மாவட்டங்களுக்குமான புதிய நிர்வாக மொன்றைத் தெரிவுசெய்ய முயற்சித்தனர். இதன்போது அழையாவிருந்தாளியாக உள்நுழைந்த கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத் தலைவி மற்றும் வடக்கு - கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத் தலைவி உள்ளிட்ட குழுவினர், அங்கு கூடியிருந்தவர்களுடன் முரண் பட்டனர். அது கைகலப்பாக மாறுமள வுக்குச் சென்றது. அதனையடுத்து பொலி ஸார் அழைக்கப்பட்டு, குழப்பத்தில் ஈடுபட்ட 07 பேர் கைதுசெய்யப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த மோதல்கள், கைதுகளையடுத்து காணாமலாக்கப்பட்டவர்களைத் தேடிப் போராட்டம் நடத்தும் உறவுகள் விரக்தியின் உச்சத்துக்கு வந்துவிட்டனர். ஒரு சில நபர்களின் அரசியலுக்காக தம் ஒட்டு மொத்த வலிகளையும் விலைவைத்து விட்டதாக கவலையுறுகின்றனர். போராட்டங்களிலிருந்து ஒதுங்கியிருக்க முடிவெடுத்திருக்கின்றனர்.

ஆகவே அரசு செய்ய நினைத்ததைப் புலம்பெயர் அமைப்புகள் நடத்திக் காட்டியிருக்கின்றனவல்லவா?

வில்லை என்பதே இப்பிரச்சினையை இன்னமும் முடிவுறாமல் வைத்திருக்கும் காரணி.


இந்தக் காரணியை இறுகப்பற்றிக் கொண்டுதான் கடந்த பல வருடங்களாகக் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் போராடிக்கொண்டிருக்கின்றனர். தம்மிடமிருந்து பறித்துக்கொண்ட வர்களைத் தாருங்கள், கொன்றுவிட்டால் அவர்களின் ஒரு பிடி சாம்பலையாவது தாருங்கள் என அரசிடம் கோரி கடந்த 6 வருடங்களுக்கு மேலாக, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் வீதியில் அமர்ந்து தொடர் போராட்டங் களை முன்னெடுத்திருக்கின்றனர். ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒவ்வொரு வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கமும், வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் ஒரு சங்கமுமாக அமைத்துப் போராட்டங்களை நடத்திக்கொண்டி ருக்கின்றனர்.

இந்தப் போராட்டக்காலத்தில் பல சிக்கி சின்னாபின்னமாகிக்கொண்டிருக் கின்றன. 2009 ஆம் ஆண்டில் மௌனித்து விட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் "அரசியல்துறை" எனத் தம்மை விளம் பரப்படுத்திக்கொள்ளும் ஒரு கடிதவுறை அமைப்பு, உலக தமிழர் இயக்கம், வரலாற்று மையம் எனப் பல அமைப்புகள் இதனுள் கைநனைத்திருக்கின்றன. தாய் மார்களின் கண்ணீரையும், வறுமையையும் பயன்படுத்தி போராட்டங்களுக்குள் உள்நுழைந்த இந்த அமைப்புகள் தம் பெருமைக்கும், நிதி திரட்டலுக்கும், அரசியல் ஆதாயத்துக்கும் அவர்களைப் பயன்படுத்தியிருக்கின்றன. அரசும், இலங்கை புலனாய்வுத்துறையும் பல வடிவங்களில் முயற்சித்தும் செய்ய முடியாத காரியங்களை இந்தப் புலம்பெயர் அமைப்புகள் செய்துமுடித்திருக்கின்றன. தமது அமைப்புக்களுக்கு ஆட்திரட்டும் போட்டியில் காணாமலாக்கப்பட்டோர் சங்கங்களைக் "கொழுவிவிட்டிருக்கின்றன". வலிந்து காணாமலாக்கப்பட்டோர்


## வாசகர் களம்

எரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர் களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துக்கள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி
ஆசிரியர்பீடம், எதிரொலி



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175



# போரே! நீ போ!!

● சியாமளா யோகேஸ்வரன்

விஞ்ஞானத்துடன் தொழினுட்பமும் முன்னேறி விண்வெளியைக் கூடத் தொட்டுவிட்டோம் என்று நாமெல்லாம் வீரம் பேசிக் கொண்டிருக்கின்றோம். மறுபக்கத்தில் மனிதமும் அறமும் மரணித்து விட்டனவா என்பதைப் பற்றி ஆறறிவு கொண்ட மனிதன் எண்ணிப்பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பூமிப்பந்தின் ஏதோவொரு பக்கத்தில் மனிதர்களின் இரத்தத்தால் பூமாதேவி தொடர்ந்து நனைந்து கொண்டு தானிருக்கின்றாள். மதத்துக்காகவோ, எல்லைகளுக்காகவோ அல்லது பொருளாதார அரசியல் காரணங்களுக்காகவோ நாடுகள் ஆங்காங்கே சண்டையிட்டுக் கொண்டுதானிருக்கின்றன. கொரோனா என்ற ஒரு உயிர்கொல்லி நோய் இந்த உலகைத் தாக்கிய நேரத்தில் எந்த நாடும் எதற்காகவும் சண்டையிட்டுக் கொள்ளவில்லை. உயிர்ப்பயம் உலக நாடுகளைத் துரத்த அந்த நோயிலிருந்து தம்மைக் காப்பாற்றிக்கொள்ளும் வழிவகையைத் தேடினவே தவிர சண்டை பிடிப்பதற்கான அத்தனை காரணங்களும் அப்படியே இருந்தும் அவற்றை எல்லாம் மூடை கட்டி மூலையில் போட்டு விட்டிருந்தன.

இப்போது அந்தப்பயம் நீங்கி விட்டதால் தம் அழிவுக்கண்டு பிடிப்புகளின் பெறுமதியை மனித உயிர்களை வைத்து மதிப்பிட்டுக் கொண்டிருக்கின்றன. ஐந்தறிவு கொண்ட உயிர்களுக்காக உரிமைக்குரல் கொடுக்கத் தயாராக உள்ளவர்கள் சகமனிதனின் உயிர் பலிபோவதைப் பற்றிக் கவலைப்படுவதாய் தெரியவில்லை. யாரின் பக்கம் நியாயம் இருக்கின்றது என்பதை அலசுவதற்கு முதலில் இப்படியான போர்களும் உயிரிழப்புகளும் தேவைதானா என்பதை இந்தப் போர்களை வழி நடத்துபவர்களும் ஆதரவளிப்பவர்களும் ஏன் சிந்திக்க மறுக்கின்றனர்? சிந்திக்கும் ஆற்றலைத் தொலைத்து விட்டு சிக்கல்களுக்கான ஒரே தீர்வாக வன்முறை என்ற ஆயுதத்தை ஏன் கையில் எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்?

இப்போது இஸ்ரேலிய - பாலஸ்தீனத்தில் நடக்கும் நிகழ்வுகளும், நாளாந்த மரணத்தின் எண்ணிக்கைகளும் ஒரு காலத்தில் எம்மண்ணில் நிகழ்ந்த போருடன் ஒத்துப் போவதால், மனம் வலிப்பதைத் தடுக்க முடியவில்லை. எதற்காக இந்தப் போர் என்பதை அறியாத பச்சைக் குழந்தைகள் முதல் போரில் எந்த விதத்திலும் சம்பந்தப்படாதவர்கள், போரை அடியோடு வெறுப்பவர்கள் வரை காரணம் தெரியாமலேயே நாளாந்தம் மரணித்துக் கொண்டிருக்கின்றார்கள். போர் என்று வந்து விட்டாலே எதிர்த்தரப்பில் கொன்று குவிக்கப்படும் எண்ணிக்கையை வைத்துத்தான் வெற்றியா தோல்வியா என்பது தீர்மானிக்கப்படுகிறது.

பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையே நிகழும் போர் இன்று நேற்று தொடங்கியதில்லை. ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் பலஸ்தீனத்தில் அரபுக்கள் அதிகமாயும் யூதர்கள் சிறுபான்மையினராயும் வாழ்ந்து வந்தனர். உலகப்போரின் முடிவில் ஜேர்மனிய அச்சுறுத்தல் காரணமாக தம் பாதுகாப்புக் கருதிய யூதர்கள் அதிகளவிலாக இப்பகுதிக்குக் குடி பெயர்ந்தனர். அப்போது நாட்டை ஆண்ட பிரித்தானியர்களின் தவறான அணுகுமுறையாலும், ஏற்றுக்கொள்ளப்படாத தீர்ப்புகளாலும் யூதர்களுக்கும் அரபுக்களுக்குமிடையேயான பிளவுகள் பெருகத் தொடங்கின. காலப்போக்கில் இருபகுதியினருக்குமான முறுகல் நிலை தீவிரம் பெற்று, இன்று வரையிலும் இரண்டு பக்கத்திலும் பல உயிர்கள் பலியிடப்பட்டு விட்டன. இலங்கையிலும் பிரித்தானியர்களின் ஆட்சிக் காலத்தின் பின்னர் தமிழர்களின் ஆட்சிப்பொறுப்பு மறுக்கப்பட்டமைதான் உள்நாட்டுப்பிரச்சினைகள் ஆரம்பித்தமைக்கான அத்திபாரமாக அமைந்தது என்பதில் கூட ஒற்றுமை இருக்கின்றது.

2006ம் ஆண்டு தேர்தலில் வென்று பலஸ்தீனத்தின் ஹாசா என்ற நிலப்பரப்பை ஆட்சி செய்து கொண்டிருப்பவர்களே இந்தக் ஹமாஸ் என்ற அமைப்பினர். இஸ்ரேலின் ஆட்சிக்குள் இருந்த ஹாசா பகுதியை இப்போது ஆட்சி செய்து கொண்டிருக்கும் இந்த அமைப்பினர் தாம் இழந்த தம் மதத்துக்கான புனித பிரதேசங்களான கிழக்கு ஜெருசலேம் உட்பட்ட சில இஸ்ரேலியப் பகுதிகளை மீண்டும் இஸ்லாமிய வலயமாக பிரகடனப்படுத்துவோம் என்று சூளுரைத்துள்ளனர். மறுபுறத்தில் ஜெருசலேம் கிறிஸ்தவர்களின் புனித இடம் என்று இஸ்ரேலிய யூதர்கள் உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். மதம் மண்ணில் தான் இருக்கின்றது என்பதன் அடிப்படையில் இரண்டு நாடுகளுமே நிலத்துக்காக உரிமைப்போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றன. இஸ்ரேலுக்கு அமெரிக்கா மற்றும் பிரிட்டன் போன்ற நாடுகள் உட்பட்ட சில மேற்கத்தைய நாடுகள் பின்புல ஆதரவைக் கொடுத்துக் கொண்டிருக்க, பலஸ்தீனியர்களின் உரிமைக்காக இஸ்லாமிய நாடுகள் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றன.

ஹமாஸ் என்ற பலஸ்தீன அமைப்பினர் ஐப்பசி ஏழாம் திகதி இஸ்ரேல் போட்டு வைத்திருந்த பாதுகாப்பு வேலியைத் தாண்டி இஸ்ரேலிய எல்லைக்குள் சென்று நடாத்திய தாக்குதலுக்குப் பழி வாங்கும் நடவடிக்கையாக தொடங்கப்பட்ட போர் இன்று உச்சக்கட்டத்தை தொட்டிருக்கின்றது. சமய விடுமுறைக் காலத்தில் தளர்வாக இருந்த எல்லைப் பாதுகாப்பை உடைத்துக் கொண்டு உள் நுழைந்த ஹமாஸ் இயக்கத்தினரால் சுமார் 1200 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டும் 150ற்கும் அதிகமானோர் பயணக்கைதிகளாகச் சிறைபிடிக்கப்பட்டும் இருக்கின்றனர். போர் என்று வந்து விட்டாலே இருதரப்பிலும் இராணுவ வீரர்களின் சாவுகள் இயல்பானவை. உண்மையான ஒரு விடுதலைப் போராட்ட அமைப்பு எதிர்த்தரப்பில் அப்பாவிமக்களை கொல்லும் ஈனச்செயலைச் செய்யமாட்டாது என்பதை நாம் அறிவோம். ஆனால் இஸ்ரேலியக் குடியிருப்புக்குள் நுழைந்து அப்பாவிப்பொதுமக்களைக் கொன்றமை கொடூரமான ஒரு செயலாகவே கருதப்பட வேண்டும். அதற்குப் பதிலடி கொடுக்கும் நடவடிக்கையாக இஸ்ரேல் முன்னெடுத்துக் கொண்டிருக்கும் போர் நடவடிக்கையானது ஹமாஸ் என்ற தீவிரவாதிகளை ஒடுக்குவதை மட்டும் குறிக்கோளாக கொண்டிருப்பதாக தெரியவில்லை. பலஸ்தீனத்தில் உள்ள சாதாரண பொது மக்களும், குழந்தைகளும் கூட எண்ணிக்கை கணக்கின்றிக் கொன்று குவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். கார்த்திகை மாத முதல் வாரக் கணக்கின்படி 3648 சிறுவர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள் என்ற உண்மை எல்லோரையும் உலுக்கி இந்தப்போரின் தீவிரம் பற்றி எடுத்துச் சொல்கின்றது. பயணக்கைதிகளாகப் படிக்கப்பட்ட இஸ்ரேலியர்களை மீட்கும் நடவடிக்கை என்று கூறப்பட்டாலும் சிறைபிடிக்கப்பட்டவர்களில் கிட்டத்தட்ட 50க்கும் அதிகமானோர் இஸ்ரேலின் விமானத் தாக்குதலில் ஏற்கனவே கொல்லப்பட்டு விட்டனர் என்பது மீட்பு நடவடிக்கைகளுக்கு முரணான தரவாக உள்ளது.

ஈழத்தில் நிகழ்ந்த விடுதலைப் போருக்கும் இப்போது பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான போருக்கும் இடையில் அதிகளவிலான வேறுபாடுகள் இல்லை. ஒரு நாட்டில் பெரும்பான்மையினராக வாழும் ஒரு இனம் மற்றைய இனத்தின் மேல் அடக்குமுறைகளையும் வன்முறைகளையும் திணித்து அந்த இனத்தை ஒடுக்குவதற்காக வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவது என்பது எமக்குத் தெரிந்த வரலாறே. எம் நாட்டில் கொத்துக் கொத்தாய் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்ட போதும், உலக நாடுகள் இதே போன்று தான் அமைதியாய் இருந்தன. குழந்தைகளும், முதியோர்களும், அப்பாவிகளுமாய் ஒன்பதாயிரத்துக்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு விட்டபோதிலும் உலக நாடுகள் வாய்மூடி மௌனம் காப்பது, எம் உள்நாட்டில் நடந்த இறுதிக்கட்டப் போரை ஞாபகப்படுத்தத் தவறவில்லை. போரை நிறுத்த வேண்டும், போர்க்கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று சில நாடுகள் ஒப்புக்கு ஓலமிட்டுக்கொண்டிருக்கின்றனவே தவிர ஆக்கபூர்வமாக போரை நிறுத்தி மக்களின் உயிரைக் காப்பதற்கு உலகநாடுகள் எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. அன்றும் தடை செய்யப்பட்ட பொஸ்பரஸ் குண்டுகள் தமிழர்களை கொன்று குவிக்கப் பாவிக்கப்பட்டன. இன்றும் கேட்பதற்கு ஆளின்றி அதே குண்டுகள் பாவிக்கப்படுகின்றன. போர் என்று வந்து விட்டால் நியாயம், தர்மம், போர்க்குற்றம் என்ற நெறிமுறைகள் எவையுமே பின்பற்றப்படுவதில்லை என்பது தான் வரலாறு சொல்லும் பாடம். அன்று மூக்கு நீண்ட உலங்கூர்திகள் தமிழர்களின் வான்பரப்பில் பறந்தாலே தமிழர்கள் கிலி கொள்வார்கள். அவை இஸ்ரேலியத் தயாரிப்புகள் என்பதுதான் இஸ்ரேல் என்ற நாட்டை எமக்கெல்லாம் முதலில் அறிமுகப்படுத்திய விதம் என்பதையும் இங்கு குறிப்பிட்டேதான் ஆக வேண்டும்.

தமிழினத்தின் மீது பொருளாதாரத் தடையை விதிப்பதன் மூலம் போராட்டத்தை ஒடுக்கி விடலாம் என்று சிங்கள அரசாங்கம் தீர்மானம் செய்து தமிழர் பகுதிகளுக்கான உணவு, மருத்துவசதி மற்றும் போக்குவரத்தை முற்று முழுதாகத் தடை செய்தது. அதே போன்று இன்றும் ஹாசாப்பகுதிக்கான உணவு, மருந்து, மின் தடையுடன் நீர் விநியோகத்தையும் இஸ்ரேல் முற்று முழுதாகத் தடை செய்து விட்டிருக்கின்றது. இயற்கை வளங்கள் குறைந்த பகுதியான ஹாசாவில் வாழும் மக்களுக்கு அடிப்படைத் தேவையான குடிநீர் விநியோகம் முற்றாகத் தடை செய்யப்பட்டிருக்கின்றது. 1.7 மில்லியன் ஹாசாப் பிரதேச மக்களில் 75% மானோர் இன்று உண்ண உணவின்றி அருந்துவதற்குக் குடிநீருமின்றி அகதிகளாக அலையும் அவல நிலைக்கு ஆளாகியிருக்கின்றார்கள். நாளாந்தக் குடிநீர் தேவையில் ஐந்து சதவீதமான அளவு தண்ணீர் மட்டுமே கிடைக்கக்கூடிய நிலைமையில் குழந்தைகள் நீரிழப்பினால் மடியக்கூடிய அவல நிலை ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல, ஹாசாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களில் 80 சதவீதத்தினர் வறுமைக்கோட்டுக்குக் கீழ்தான் வாழ்பவர்கள். இங்கு வேலையில்லாதவர்களின் சதவீதம் 46 என்று புள்ளிவிபரம் சொல்கின்றது. வறுமையுடன் போராடுபவர்கள் இப்போது உயிரைக் காப்பாற்றவும் போராட வேண்டியவர்களாக இருக்கின்றார்கள் என்ற உண்மை வேதனைக்குரியதொன்றே.

பேரழிவைச்சந்தித்துக் கொண்டிருக்கும் ஹாசா எல்லைப் பகுதியில் நடைபெறும் இந்த யுத்தத்தால் பாதிக்கும் மேற்பட்ட வைத்தியசாலைகள் இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. மின்சார வசதியின்மையால் வைத்திய உபகரணங்கள் எவற்றையும் உபயோகித்து காயம் பட்ட மக்களுக்கான மருத்துவவசதிகளை வழங்க முடியவில்லை. வைத்தியசாலையும் அதனை அண்டிய பகுதிகளும் அமைதி வலயமாகப் பிரகடனப் படுத்தப்பட்டிருந்தாலும் அங்கும் குண்டுகள் விழுந்த வண்ணம் தான் இருக்கின்றன. இந்த நூற்றாண்டில் வைத்திய வசதி இன்றிக் காயங்களுடன் கண் முன்னால் மரணத்தை வரவேற்கும் நிலையில் சகமனிதர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். தமிழீழத்திலும் இதே நிகழ்வுகள் நடந்திருக்கின்றன, யாழ். வைத்தியசாலையில் இந்திய இராணுவத்தினரின் கொடூரத் தாண்டவம், புதுமாத்தளன் வைத்தியசாலை மீதான தாக்குதல், அமைதிவலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளின் மீதான விமான மற்றும் எறிகணைத் தாக்குதல் என்ற நிகழ்வுகளிலும் கூட ஒற்றுமை இருக்கின்றது.

பலஸ்தீனத்தின் நெடிதுயர்ந்த கட்டடங்கள் குண்டுத் தாக்குதல்களால் ஒரு கணத்தில் தரைமட்டமாக்கப்பட்டு விடுகின்றன. இடிந்த கட்டடங்களுக்குள் இருந்து அவயவங்களை இழந்த குழந்தைகள் மீட்கப்படும் காட்சிகள் மனதை உருக்குகின்றன. உயிருக்கான மதிப்பு எல்லோருக்கும் ஒன்றுதான். உறவுகளை இழக்கும் வேதனை எல்லோருக்கும் பொதுவானதே. உறவுகளை இழக்கும் போது வரும் வலி, சாதி, மதம் ஏற்றத்தாழ்வு என்று எந்தப் பேதமும் பார்ப்பதில்லை. விதிகளைப் பேணாத ஒரு அமைப்பு செய்த கொலைகளுக்குப் பழி வாங்கும் வகையில் ஒன்றும் அறியாத அப்பாவிகள் கொன்று குவிக்கப்படுவதை நியாயப்படுத்தி இந்த உலக நாடுகள் வாய் மூடி மௌனியாகவே தான் இருக்கப்போகின்றனவா?

போர் நிறுத்தம் வேண்டும் என்று சில நாடுகள் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் போர் நிறுத்தமானது ஹமாசுக்கு ஆதரவாக அமைந்து அவர்களை இந்த இக்கட்டான நிலையில் இருந்து மீட்டு விடும். மீண்டும் அவர்கள் தம்மைப் பலப்படுத்திக் கொண்டு விடுவார்கள் என்றே போர்நிறுத்தக் கோரிக்கையை அமெரிக்கா மறுதலித்துக் கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு நாடுகளும் தம் நலன்களை மட்டுமே முன்னிறுத்திப் பேசிக்கொண்டிருக்கின்றனவே தவிர பாதிக்கப்பட்ட இருபுற மக்களுக்காகவும் குரல் கொடுக்க யாரும் முன்வரவில்லை. இரு நாடுகளில் தொடங்கிய சண்டை, உலக நாடுகளை இரு அணிகளாகப் பிரியவைத்து மீண்டும் ஒரு உலகப் போருக்கான பிள்ளையார் சுழியைப் போட்டுவிடக் கூடிய ஒரு அபாயமும் இருக்கின்றது. யார் பக்கம் நியாயமுள்ளது என்பதைத் தீர்மானிக்க முடியாதளவுக்கு சிக்கல்கள் நிறைந்த இந்தப் போரில் உடனடியாகத் தீர்வு எட்டப்பட்டு விடும் என்று சொல்ல முடியாது. ஆனால் இந்தப் போர் உடனடியாக நிறுத்தப்பட்டு உயிர்ப்பயம் இன்றி நிம்மதிப்பெருமூச்சு விடக் கூடிய நிலை ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதே இப்போதைய உடனடித் தேவை.



# அழகான பையனின் இராஜ(த)ந்திர விஜயம்

ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி



சீனப் பிரதமர் லி கிய்ங் "எங்கள் ஊருக்கு ஆஸ்திரேலியாவில் இருந்து ஒரு அழகான பையன் வந்திருக்கிறான் என்று எங்கள் மக்கள் என்னிடம் சொன்னார்கள் " என்று தெரிவித்தார். அந்த அழகான பையன் யார்? என நீங்கள் சிந்திக்கலாம். அது வேறு யாருமல்ல நமது மாண்புமிகு பிரதமர் அன்டனி அல்பானீஸ் அவர்கள்தான். நமது பிரதமரையே வெட்கப்பட வைக்கும் பாராட்டை லி அவர்கள் அல்பானிஸின் சமீபத்திய சீனப் பயணத்தின் போது தெரிவித்தார். இதில் குறிப்பிடப்பட வேண்டிய விடயம் ஆஸ்திரேலியாவை நம்பி சீனா இல்லை. நாம் தான் அவர்களைப் பெரிதும் சார்ந்திருக்கிறோம். இந்தப் பயணத்தின் முடிவில் பிரதமர் தெரிவித்த கருத்து , "இந்த விஜயத்தின் முக்கியமான நோக்கம் ஆஸ்திரேலிய வேலை உருவாக்கம் மற்றும் நமது வர்த்தகத்தில் உள்ள தடைகளை விளக்குவதன் மூலம் நாம் பெறக்கூடிய நீண்ட காலப் பலன்கள் ஆகியவையே". ஆஸ்திரேலியாவின் மொத்த வர்த்தகத்தை பார்க்கும்போது சீனாவின் பங்களிப்பு மூன்றில் ஒரு பங்காகும். இந்த ஆண்டு ஜூன் வரையிலான ஆஸ்திரேலியா -சீனா இருவழிப் பொருட்கள் வர்த்தகத்தின் மதிப்பு $303bn ஆகும். மொத்தத்தில் 30% அளவு என்று வெளியுறவு மற்றும் வர்த்தகத் துறை தரவுகள் தெரிவிக்கின்றன. இது 2021-22 இல் 11% அதிகரித்துள்ளது.


சீனா-ஆஸ்திரேலியா இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் (Chafta) அப்போதைய டர்ன்புல் அரசாங்கத்தால் டிசம்பர் 2015 இல் நடைமுறைக்கு வந்தது. இந்த ஒப்பந்தமானது "ஆஸ்திரேலியாவுக்கு மகத்தான நன்மைகளை வழங்கும், சீன சந்தையில் நமது நிலையை மேம்படுத்தும் நமது பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கும். மற்றும் புதிய வேலைகளை இங்கே உருவாக்கும் ." என்று டர்ன்புல் தெரிவித்திருந்தார். அந்த நம்பிக்கைகள் எல்லாம் கடந்த 2020 இல் கடுமையான பின்னடைவைச் சந்தித்தன, அப்போதைய மோரிசன் அரசாங்கம் கொவிட் தொற்றுநோயின் தோற்றம் பற்றிய கருத்துக்களால் சீன அரசாங்கம் கோபமடைந்தது. சீன அரசு ஊடகங்கள் ஆஸ்திரேலியாவை "சீனாவின் காலணியில் ஒட்டிக்கொண்ட மிட்டாய்(Gum) "என்று கேலி செய்தன. சீன அரசாங்கமும் பார்லி, மாட்டிறைச்சி, பருத்தி, நிலக்கரி மற்றும் வைன் போன்ற பொருட்களை ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்ய கட்டுப்பாடுகளை விதித்துள்ளது, மேலும் கொவிட் தொற்றுக்காலத்தில் இனவெறித் தாக்குதல்களின் அடிப்படையில் ஆஸ்திரேலியாவுக்கு பயணம் செய்வதற்கு எதிராக அதன் குடிமக்களுக்கு எச்சரிக்கைகளையும் வழங்கியது. இவ்வாறாக மொத்தமாக இரண்டு நாடுகளுக்குமிடையே இருந்த நட்புணர்வு மொத்தமாகக் குறைந்தது மட்டுமல்லாமல், நமது பொருளாதாரத்தையும் வெகுவாகப் பாதித்தது. இவ்வாறான சூழ்நிலையில் தான் முறிந்த உறவினை மேம்படுத்த அல்பானீஸ் மேற்கொண்டுள்ள இந்தப் பயணம் தொலைநோக்கில் வெகுமுக்கியமானது.

இந்தப் பயணத்தின் மூலம் நமது பிரதமர் பேசிமுடிக்க வேண்டிய காரியங்கள் நிறைய இருந்தாலும் அரசியல் ஆர்வலர்கள் முக்கியமாக எதிர்பார்ப்பது ஐந்து விசயங்கள். 1. ஆஸ்திரேலிய எழுத்தாளரும் ஜனநாயக ஆர்வலருமான யாங் ஹெங்ஜூன் கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளாக சீனாவால் சிறையில் வைக்கப்பட்டுள்ளார். அவரது விடுதலை குறித்து பேசுவது 2. சீனாவிற்கு மிக முக்கியமான வர்த்தக உடன்படிக்கையான டிரான்ஸ் பசிபிக் கூட்டாண்மையில் சேரும் விருப்பமுள்ளது. இதைப் பற்றி பேசுவது சீன அதிபரான ஸி-யின் நிரலில் உள்ளது. 3.உக்ரைன் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் நடக்கும் போர் குறித்து 4 . லாப்ஸ்டர்ஸ் மற்றும் வைன் இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது. 5. நாடுகளுக்கிடையேயான பரஸ்பர தொடர் பேச்சுவார்த்தைகள்.

1 . யாங் ஹெங்ஜூன் விடுதலை குறித்து செய்தியாளர்கள் அல்பானீஸூடம் கேட்டபொழுது , "அதிபருடன் இது குறித்து பேசினேன். ஆனால் அந்த விபரங்களை இப்பொழுது அளிக்க முடியாது " என்று மறுத்துவிட்டார். 2. டிரான்ஸ் பசிபிக் வர்த்தகக் கூட்டணி - "இந்த உடன்படிக்கையில் சீனா சேர வேண்டுமென்றால் அதற்கு கூட்டணியிலுள்ள அனைத்து நாடுகளின் ஏகோபித்த ஆதரவு தேவை. பல நாடுகள் சீனாவை அந்த ஒப்பந்தத்தில் சேர்க்க விரும்பாததால் அது சாத்தியமில்லை" என்று கருத்து தெரிவித்தார். ஆனால் ஆஸ்திரேலியா சீனாவின் இந்த முயற்சியை ஆதரிக்குமா என்பது குறித்து திட்டவட்டமாக எதுவும் தெரியவில்லை. 3. உக்ரைன் மற்றும் மத்திய கிழக்கு போர் - இரு தலைவர்களும் உக்ரைன் குறித்தும், மத்திய கிழக்கு போர் குறித்தும் பேசியதாகவும் நமது பிராந்தியத்தில் அமைதி மற்றும் பாதுகாப்பின் அவசியத்தை சீன அதிபர் வலியுறுத்தினார் என்றும் அல்பானீஸ் கூறுகிறார். 4. இறால் மற்றும் வைன் - பெய்ஜிங்கில் திங்கள்கிழமை இரவு நடந்த இரு நாட்டு தலைவர்களை கூட்டத்திற்கு முன்னதாக சீனா சில வர்த்தகத் தடைகளை நீக்கியது, ஆனால் ஆஸ்திரேலியாவிலிருந்து இறால் ஏற்றுமதியில் உள்ள கட்டுப்பாடுகளும், வைன் மீது விதிக்கப்பட்ட வரிகளையும் இன்னும் முழுதாக சீனா ரத்து செய்யவில்லை. ஆனால் இது கூடியவிரைவில் நடக்கும் என ஆஸ்திரேலிய அரசாங்கம் எதிர்பார்க்கிறது. 5 . பேச்சுவார்த்தைகள் - தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகள் நடப்பது நிச்சயம் போல் தெரிகிறது. எதிர்காலத்தில் ஆஸ்திரேலியாவுக்கு வருமாறு அல்பானீஸ், ஜியை அழைத்தார். சீனாவின் பிற பகுதிகளுக்கும் செல்லுமாறு அல்பானீஸூக்கு, ஜி அழைப்பு விடுத்தார்.

பிரதமரின் இந்த சீனப் பயணம் பொதுவாக வெற்றியில் முடிந்ததென்றே சொல்ல முடியும். இரு நாடுகளுக்கிடையே பிளவுபட்ட உறவை சரி செய்யக்கூடிய முதல் வாய்ப்பை மிகத் திறமையாக பயன்படுத்தியிருக்கிறார். சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அரச ஊடகங்கள் மிகவும் சாதகமாகவே இந்தப் பயணத்தைப் பற்றி எழுதியிருக்கின்றன . பல வருட பதற்றத்திற்கு பிறகு இந்தப் பயணம் " இரு நாடுகளுக்கிடையே வெற்றிகரமான ஒத்துழைப்பு , "எதிர்காலத்திற்கான திறப்பு " மற்றும் இருதரப்பு உறவுகளை முன்னோக்கி கொண்டு செல்ல "சரியான பாதைக்கு" ஆஸ்திரேலியா திரும்புவதையே நிரூபித்தது.

இருநாட்டு தலைவர்களும் கூறிய கருத்துக்கள் அனைத்தும் பொதுவான மக்களைச் சேரவேண்டிய தகவல்கள். என்னவெல்லாம் பேசப்பட்டது மற்றும் என்னவெல்லாம் முடிவெடுக்கப்பட்டதெல்லாம் ராஜதந்திரக் காரியங்கள் . நமக்கு என்றும் தெரியப்போவதில்லை. அதாவது ராஜதந்திரம் என்பது யாரையும் தொந்தரவு செய்யாமல் உங்கள் செய்தியை / விருப்பத்தை மென்மையாகவும் கண்ணியமாகவும் வெளிப்படுத்தும் கலை. அல்பானீஸ் இந்தக் கலையில் கைதேர்ந்த விற்பன்னர். ஆனால் சீன அதிபர் இவரைவிட பலமடங்கு சாதுர்யம் நிறைந்தவர். ஆதலால் இந்தப் பயணத்தின் உடனடி விளைவுகள் என்னவென்று இப்போதைக்கு வரையறுக்க முடியாது. காலம் தான் பதில் சொல்லும். அதுவரைக்கும் நாமும் அழகிய பையனுடன் சேர்ந்து காத்திருப்போம்.



# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

கார்த்திகை 2023 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162


## மாவீரர் வார சிறப்பிதழ்



# தமிழர் பண்பாட்டு அடையாளங்களில் ஒன்றாக மாறியுள்ள மாவீரர் வழிபாடு!

“தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப் பேழைகளே! – இங்கு
கூவிடும் எங்களின் குரல்மொழி கேட்குதா?
குழியினுள் வாழ்பவரே!
உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள்
உறவினர் வந்துள்ளோம் – அன்று
செங்களம் மீதிலே உங்களோடாடிய
தோழர்கள் வந்துள்ளோம்.....”

என்றொலிக்கும் இந்தப் பாடலை மாவீரர் நினைவாகக் கவிஞர் புதுவை இரத்தினதுரை எழுதியபோது, ஒரு காலை வேளையில் கையெழுத்துப் பிரதியாக முதலில் படித்திருந்தேன். அதற்குப் பிறகே இது பாடலாக இசைக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளி மேஜர் சிட்டுவும் வர்ணராமேஸ்வரனும் இந்தப் பாடலைப் பாடினார்கள். கண்ணனும் அவருடைய மகன் முரளியும் இசையமைத்திருந்தனர். இந்தப் பாடல் எழுதப்பட்ட காலத்தில் மாவீரர் வழிபாடும் சுடரேற்றுவதும் நவம்பர் 27 நள்ளிரவு 12 மணிக்கே நடந்தன. அதனால், இந்தப் பாடலின் இரண்டாவது சரணத்தில் உள்ள வரிகள் -

“நள்ளிரா வேளையில் நெய்விளக்கேற்றியே
நாமும் வணங்குகின்றோம் – உங்கள்
கல்லறை மீதிலெம் கைகளை வைத்தொரு
சத்தியம் செய்கின்றோம்..”

என்றிருந்தன.

பிறகு சுடரேற்றும் நேரம் நவம்பர் 27 மாலை 6.05க்கு மாற்றப்பட்டது. விடுதலைப் புலிகளின் போராளியான லெப் சங்கர் என்ற செல்வச்சந்திரன் சத்தியநாதன் முதன் முதலில் சாவடைந்த - 1982.11.27 மாலை 6.05 என்ற - நேரத்தையே மாவீரர் வணக்கத்துக்குரிய நேரமாகப் புலிகள் அறிவித்தனர். சங்கர் சாவடைந்து, ஏழு ஆண்டுகளுக்குப் பிறகே மாவீரர்நாள் என்ற நினைவு கூரல் ஆரம்பிக்கப்பட்டது.

இந்திய அமைதிப்படைகளுடன் புலிகள் போரிட்டுக் கொண்டிருந்த 1989 இல் புலிகள் தீவிர முற்றுகைக்குள்ளாகியிருந்தனர். அந்த நாட்களில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டிருந்தது. இளைஞர்கள் ஊர்களில் இருக்க முடியாதென்ற நிலை. இதனால் பலரும் வெளிநாடுகளுக்குப் பறந்தனர். இன்னொரு தொகுதியினர் காட்டில் புலிகளைத் தேடிப் போனார்கள். காடு புலிகளால் நிறையத் தொடங்கியது. போர் உக்கிரமடைந்தது. இழப்புகளும் அதிகமாகிக் கொண்டிருந்தன. இந்த நிலையிலேயே விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், மாவீரர்நாளை அனுஸ்டிப்பதற்கு முடிவெடுத்தார். இதற்குக் காரணம், விடுதலைக்காகப் போராடி வீரமரணமடைந்தவர்களின் நினைவுகளைப் போற்றவும் அதற்குரிய குடும்பத்தினரின் உளநிலையை ஆற்றுப்படுத்தவுமே.



கருணாகரன்

விடுதலைப் போராட்டமானது எதிர்பார்க்கப்பட்டதற்கும் அதிகளவிலான உயிரிழப்பைச் சந்திக்கத் தொடங்கியிருந்தது. யுத்தம் விரிய விரிய இழப்புகளின் தொகையும் கூடியது. இது சமூகத்திலே பெரும் உளத்தாக்கத்தை உண்டாக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தியது. “இந்த நிலை நீடித்தால், ஒவ்வொரு வீட்டிலும் சாவையே எதிர்கொள்ளவேண்டி நேரிடும் என்ற எண்ணம் - அச்சம் - மக்களிடத்திலே உருவாகி, எதிர்மறையான நிலைமைகளை உண்டாக்கும். அது பெரியதொரு சவாலாகவே மாறக்கூடும்” என்று புலிகள் கருதினர். இதனால், “போராடிக் களத்தில் வீழ்கின்ற போராளிகளை உன்னதமான இலட்சியத்துக்காக மரணித்தவர்கள். அவர்களுடைய வாழ்வும் மரணமும் மகத்துவமானது. வரலாற்றுச் சிறப்புக்குரியது. அவர்களுடைய மரணம் புகழ்மிக்கது, புனிதமானது” என்ற விடயங்களை உணர்த்தக்கூடிய வகையில் மாவீர் நினைவு கூரல் ஆரம்பிக்கப்பட்டது.

இதற்குப் பிறகு, ஒவ்வொரு போராளியும் தன்னுடைய சாவுக்கு ஒரு அர்த்தமும் மகத்துவமும் இருப்பதாகக் கருதத் தொடங்கினர். உயிரையும் விட உன்னதமான ஒரு காரியத்துக்காக மரணத்தைச் சந்திப்பது மகத்துவமானது என்ற எண்ணம் போராளிகளிடத்திலே உருவானது. இதேபோன்ற இன்னொருவிதமான உணர்நிலை மக்களிடத்திலும் ஏற்பட்டது. தங்கள் பிள்ளைகளும் சோதரரும் பெறுமதியான காரியங்களுக்காகவே மரணத்தை ஏற்கின்றனர். அவர்களுடைய சாவு சமூகத்தினால் மதிக்கப்படுகிறது. வரலாற்றுப் பெறுமதிமிக்கது. அவர்கள் ஒரு புனிதப்போராட்டத்திலே வரலாற்றைப் படைக்கும் மாவீர்கள் என்ற எண்ணம் உண்டானது.

இதைப் பின்னாளில் ஒழுங்கு முறைப்படுத்தி, ஒரு கட்டமைப்பாக்கி, தமிழ்ச்சமூகத்தின் மனதில் ஆழப் பதிந்த பண்பாடாக்கினர் விடுதலைப்புலிகள். இதற்காகப் பின்னாளில் அவர்கள் நடுகல் முறையை நடைமுறைப் படுத்தினர். இதற்காகத் தமிழ்ப்பண்பாட்டின் வேர்களைத் தேடிய பயணங்கள் நிகழ்ந்தன.

தமிழ்ப்பண்பாட்டிலும் அதனுடைய வரலாற்றிலும் வீரமும் அதனோடிணைந்த வீர வழிபாடும் வீரர்களுக்கான நடுகல் பண்பாடும் இருப்பதைக் கண்டறிந்த புலிகள் அவற்றை மீளுருவாக்கம் செய்தனர். சமகாலப் போரில் புறநானூற்றுக்காட்சிகள் இணைக்கப்பட்டன. தொடக்க காலத்தில் விடுதலைப்புலிப் போராளிகள் சாவடைந்திருந்தால், அந்த உடல் அந்தப் போராளியின் குடும்பத்தின் பண்பாட்டுச் சூழலின் அடிப்படையிலேயே இறுதி வணக்கத்துக்குரியதாக்கப்படுவதுண்டு. அவரவர் சார்ந்த மதப் பின்னணியில் அமைந்த சடங்குகளின் அடிப்படையிலேயே அந்த உடல் இறுதிக்குள்ளாக்கப்படும்.

ஆனால், காட்டில் விடுதலைப்புலிகள் இருந்த காலப் பகுதியில் சாவடைந்த போராளிகளின் உடல்கள் மதச் சடங்குகள் எதுவுமே இல்லாமல், புலிகளின் இராணுவ மரியாதையுடன் புதைக்கப்பட்டன. அவ்வாறு புதைக்கப்பட்ட இடங்கள் நினைவிடங்களாகக் கொள்ளப்பட்டு, உரிய போராளியின் நினைவு நாளில் நினைவு கூரப்பட்டது. இதை ஒரு வழிமுறையாகக் கொண்டே, பின்னர் மாவீரர் நினைவிடங்கள் எனப் பொதுவாக நடைமுறைப்படுத்தக் கூடிய விதிமுறைகளோடு அறிமுகப் படுத்தப்பட்டது. இதன்படியே, மாவீரர் துயிலுமில்லங்கள் உருவாக்கப்பட்டன. மாவீரர் துயிலுமில்லங்கள் உருவாக்கப்பட்ட பிறகு, சாவடையும் போராளிகளின் உடல்கள் வித்துடல்கள் என்று கொள்ளப்பட்டன. சாவடைந்த பிறகு அவர்கள் போராளிகள் என்ற நிலையிலிருந்து மாவீரர் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டனர். “வீழ்ந்த வீரர்கள் மண்ணோடு மடிவதில்லை” எனவும் “வீர்கள் புதைக்கப்படுவதில்லை. மண்ணில் விதைக்கப்படுகிறார்கள்” என்றும் சொல்லப்பட்டன. இதன்படியே பின்னாளில் மாவீரர்களின் உடல்கள் வித்துடல்கள் என்று கூறப்பட்டன. இந்த உடல்கள் விதைக்கப்படுவதாகவும் கொள்ளப்பட்டன. அப்படியே விதைக்கப்பட்ட வீரர்கள் நிரந்தரமாக விழி மூடிக் கொள்ளவில்லை. அவர்கள் துயில்கின்றார்கள் என்றழைக்கப்பட்டது. வீரர்கள் துயிலுமிடம் துயிலுமில்லங்கள் என்றாயின.

இந்த வீர வழிபாட்டைப் பற்றி, போராட்டத்தில் ஈடுபட்டுச் சாவடைந்த போராளிகளுக்குரிய மதிப்பை வழங்குவதைப்பற்றிய ஒரு உரையாடல் 1991 ஒக்டோபரில் யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் நடந்தது. கலை, இலக்கியப் படைப்பாளிகளுடனான அந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட சிலர் இந்தக் கேள்வியை பிரபாகரனிடம் நேரிலே எழுப்பியிருந்தனர். விடுதலைப்போராட்டத்தில் பல இயக்கங்களிலிருந்தும் ஏராளமானவர்கள் சாவடைந்திருக்கின்றனர். அவர்களுடைய சாவுக்குரிய மரியாதையை எப்படி வழங்குவது? அவர்களுக்கான நினைவிடங்களை எப்படி அமைப்பது? எங்கே அமைப்பது? என்ற கேள்விகளாக அவை நீண்டன.

இதற்குப் பதிலளித்த பிரபாகரன் -

“அனைத்து இயக்கப்போராளிகளின் தியாகங்களும் போற்றுதற்குரியவையே. அவர்களுக்கான இடத்தை வரலாற்றில் நிச்சயம் பதியவே வேண்டும். தற்போதைய சூழலில் அதற்கான உடனடிச் சாத்தியங்கள் குறைவாக இருப்பதால், அவர்களை இந்தத் துயிலுமில்லங்களில் நாம் சேர்த்துக் கொள்ள முடியவில்லை. எதிர்காலத்தில் சில பொது இடங்களில் அனைத்துப் போராளிகளுக்குமான நினைவிடங்கள் அமைக்கப்பட்டு, அவர்கள் நினைவு கூரப்படுவார்கள். குறிப்பாக யாழ்ப்பாணக் கோட்டைக்குப் பக்கத்திலே இருக்கின்ற இடத்தை இவ்வாறு அனைத்துப் போராளிகளுக்குமான நினைவுச் சதுக்கமாக மாற்றலாம். அப்படியான திட்டம் எமக்குண்டு” என்றார்.

இப்படியே, உயர்ந்த இலட்சியத்துக்காக தமது உயிரை அர்ப்பணித்தவர்களுக்குரிய மாண்பை மாவீரருக்கு வணக்கம் செலுத்துவதன் மூலம் வழங்க முடியும் எனப் புலிகள் சிந்தித்தனர். இதன்மூலம் அழியாத வரலாற்றைப் படைக்க முடியும் என்று நம்பப்பட்டது. இதை மக்களும் ஏற்று புலிகளுடன் இணைந்து அதைப் பின்பற்றினர். மாவீரரை வழிபடுவது என்பது இன்று தமிழ்ச் சமூகத்தின் பெருந்திரள் பண்பாடாக மாறி விட்டது. அதேவேளை, அது கொண்டுள்ள புகழும் சிறப்பும் நெருக்கடிகளையும் சந்தித்துக்கொண்டிருக்கிறது. இந்த நெருக்கடியில் தமிழ்ச் சமூகத்தினரும் எதிர்ச்சமூகத்தினரும் இணைநிலையில் பங்கேற்றுள்ளனர் என்பதே வரலாற்றுத் துயர். ■



எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI





# போராளிகளின் புகழுடல்கள் ஏன் புதைக்கப்படவேண்டும்?

**போரில் உயிரிழந்த தங்களது உறுப்பினர்களை எரிக்கப்போவதில்லை என்றும் புதைக்கப் போவதாகவும் முடிவெடுத்த விடுதலைப்புலிகள் அமைப்பு தொண்ணூறுகளில் வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கை. வித்துடல்கள் என்ற பதம் பயன்படுத்த தொடங்கிய இந்த வரலாற்று காலகட்டம் தொடர்பான பதிவு இது.**

வீரமரணமடைந்த புலி வீரர்களது உடல்கள் இனிமேல் தகனம் செய்யப்படமாட்டாது. அவைகள் புதைக்கப்படவேண்டும் என்று நாம் முடிவெடுத்துள்ளோம். இம்முடிவானது போராளிகளுள் மிகப்பெரும்பாலானோரின் விருப்பத்திற்கிணங்கவே எடுக்கப்பட்டுள்ளது.

மாவீரர்களை தகனம் செய்வதற்கென்று அமைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களில் இப்பொழுது மாவீரர்கள் புதைக்கப்பட்டு அங்கே நினைவுக் கற்கள் வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இது என்றென்றும் தியாகத்தின் சின்னமாக எமது மண்ணில் நிலைபெறும்.

மாவீரர்களின் உடல்கள் புதைக்கப்படவேண்டும் என நாம் ஏன் முடிவெடுத்தோம் என்பதையும் அதற்குரிய காரணிகளையும் இங்கே பார்ப்போம்.

### போராளிகளின் புகழுடல்கள் ஏன் புதைக்கப்படவேண்டும்?

போராளிகள் தனிமனிதர்கள் அல்ல. அவர்கள் ஒரு இனத்தின் காவலர்கள். அந்த இனத்தின் வழிகாட்டிகள். ஒரு புதிய வரலாற்றை படைக்கும் சிருஷ்டி கர்த்தாக்கள். இவர்களது வீரச்சாவுகள் வெறும் மரண நிகழ்வுகள் அல்ல. இவர்களது நினைவுகள் வரலாற்று சின்னமாக என்றென்றும் நிலைத்து நிற்கவேண்டும். இந்த தியாக சின்னங்கள் எமது மக்களின் மனதில் காலங்காலமாக விடுதலை உணர்வை ஊட்டிக்கொண்டே இருக்கும்.

அதாவது போராளிகளின் கல்லறைகள் மக்களின் உள்ளத்தில் சுதந்திர பெருஞ்சுடரை ஏற்ற உதவும் நெருப்பு கிடங்குகளாகவே பயன்படும்.

எனவேதான், போராளிகளது உடல்களைப் புதைத்து, கல்லறைகளை எழுப்பி, அதை என்றென்றும் உயிர்த் துடிப்புள்ள ஒரு நினைவுச்சின்னமாக நிலைநிறுத்த நாங்கள் விரும்புகின்றோம்.

### அன்புக்குரிய எமது பெற்றோர்களே, மக்களே!

எமது இயக்கத்தின் இந்த முடிவை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகின்றோம். இந்த முடிவு காலங்காலமாக இருந்துவந்த சம்பிரதாய சாஸ்திரங்களுக்கு முரணாக இருக்கின்றதே என நீங்கள் கருதலாம். ஆனால், உங்களது பிள்ளைகளான புலிவீரர்கள் இந்த சம்பிரதாயங்கள், சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் கடந்தநிலையில் இந்த நாட்டின் பொதுச்சொத்தாக - பொக்கிசமாக - இருக்கின்றார்கள். பல்லாயிரக்கணக்கான இப்பொக்கிசங்கள் வெறும் நினைவுகளாகவும் எண்ணிக்கைகளாகவும் மட்டும் இருக்கக்கூடாது. அவை பொருள்வடிவில் என்றென்றும் எம் மண்ணில் இருந்துகொண்டேயிருக்க வேண்டும்.

இது புறமிருக்க, எமது சக தோழர்கள் சிலரது வீரமரணத்தின் பின் நடைபெறும் சில சம்பவங்கள் எமது மனதை பாதித்திருக்கின்றன. அதாவது, பெற்றோரோ உடன் பிறந்தவர்களோ உறவினர்களோ இல்லாது நடைபெறும் எமது போராளிகளின் இறுதிச்சடங்குகளை நாம் கண்டிருக்கின்றோம்.

என்னதான் எமது தோழர்கள் சூழநின்று தகன நிகழ்ச்சிகளை நடாத்தினாலும்கூட அப்போராளியை பெற்றெடுத்து சீராட்டி வளர்த்த தாய் தந்தையரோ அல்லது உடன்பிறந்தவர்களோ அங்கே இல்லாதது எமது மனதை நெருடுகின்றது.

போராட்ட சூழல் காரணமாக அவர்கள் வரமுடியாதுவிட்டாலும் நாளை இப்பெற்றோர்களுக்கு அவர்களது பிள்ளையின் நினைவாக நாங்கள் எதைக்காட்டப்போகிறோம்?

ஒன்றன்பின் ஒன்றாக நூற்றுக்கணக்கான போராளிகளை தகனம் செய்த சாம்பல் மேட்டையா காட்டப்போகிறோம்?

அப்படியான சூழலில் அவர்கள் படும் துயரையும் அங்கலாய்ப்பையும் அனுபவ வாயிலாக நாம் அறிந்தே இருக்கின்றோம்.

எனவேதான், தனது பிள்ளையின் உடலைப்பார்க்காதுவிட்டாலும்கூட அவனது உடல் புதைக்கப்பட்ட கல்லறையை பார்த்து ஓரளவு ஆறுதல் அடையவாவது நாங்கள் உதவிசெய்வோம். அத்துடன் அடிக்கடி அக்கல்லறைக்கு சென்று அவனது நினைவுகளை மீட்டிப் பார்ப்பதுடன் ஓர் ஆத்மதிருப்தியையும் அவர்கள் அடைந்துகொள்வார்கள்.

அன்புக்குரியவர் ஒருவரின் சாவு சோகமானதுதான். ஆனால், அந்த சோகத்தை மறைக்கவேண்டும் என்பதன் அர்த்தம் அவரை மறக்க முயற்சிப்பதாக இருக்கமுடியாதுதானே?

கல்லறைக்கு மீண்டும் மீண்டும் செல்வதால் சோகம் அதிகரிக்கும் என்றில்லை. உண்மையில் அப்படிச் செய்வதால் மனம் நிம்மதி அடையும்.

எல்லாம் சரியாகத்தான் இருக்கின்றது. தகனம் செய்வதற்குப்பதிலாக புதைப்பது என்பது தமிழர் பண்பாட்டுக்கு முரணான செயலல்லவா என யாராவது வினா எழுப்பலாம்.

நீண்ட காலம்தொட்டு இருந்து வரும் “தகனம் செய்வது” தமிழரின் பண்பாடு என எண்ணுவது தவறானது. உண்மையில் பண்டைய தமிழரின் பண்பாட்டில் இறந்தவர்களது உடல் புதைக்கப்பட்டு நடுகல் வைக்கப்பட்டதாக போதுமான வரலாறுகள் உண்டு. புற நானூற்று இலக்கியமும் ஈமத்தாளி வடிவிலான தொல்லியல் சான்றுகளும் நடுகற்களும் இதை நிரூபிக்க போதுமானது.

ஆனாலும், இந்த ஆராய்ச்சிகள் ஒரு புறமிருக்கட்டும். உண்மையில் இந்த முறையை ஒரு சமூகசீர்திருத்தமாக நாங்கள் செய்யவில்லை. இது போராளிகளுக்கு மட்டுமே பொருந்தும். பொது மக்களுக்கல்ல. எனவே, இங்கே பண்பாட்டு பிரச்சினை எழ நியாயமில்லை. அத்துடன், புதைப்பது என்ற முடிவானது வெறும் இறுதிக்கிரியை நிகழ்ச்சி அல்ல. அது போராட்டத்தை உயிர்ப்புடன் என்றென்றும் வைத்திருக்கும் ஒரு சரித்திர தியாகத்தின் சின்னம்.

**நன்றி - விடுதலைப்புலிகள்**

# மாவீரர் வழிபாட்டு நடைமுறைகள்

## இதயக்கோவிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்

"எமது வீர விடுதலை வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கின்றது. இவர்களது இறப்புகள் அர்த்தமற்ற இழப்புகள் அல்ல. இந்த வீரர்களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்துசக்தியாக – எமது போராட்டத்தின் உயிர் மூச்சாக, எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகம் அளிக்கும் ஊக்குசக்தியாக – அமைந்துவிட்டன. இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாதவர்கள். சுதந்திரச்சிற்பிகள். எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச்சென்ற வீர மறவர்கள். எமது இனத்தின் சுதந்திரத்திற்காக – கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக – தமது இன்னுயிரை ஈந்துள்ள இந்த மகத்தான தற்கொடையாளர்கள் ( தியாகிகள் ) காலம் காலமாக எமது இதயக் கோவிலில் பூசிக்கப்படவேண்டியவர்கள்.

"ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையை வாழும் ஒரு சாதாரண மனிதப் பிறவி அல்ல. அவன் ஓர் இலட்சியவாதி. ஓர் உயரிய இலட்சியத்திற்காக வாழ்பவன் தனக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்பவன். மற்றவர்களின் விடிவுக்காக – விமோசனத்திற்காக – வாழ்பவன். சுயநலமற்ற, பற்றற்ற அவனது வாழ்க்கை உன்னதமானது. அர்த்தமுள்ள சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான். எனவே விடுதலை வீரர்கள் அபூர்வமான மனிதப்பிறவிகள், அசாதாரணமான பிறவிகள்."





## அலங்காரம் (சோடனை)

வீரச்சாவு, வீரவணக்கக்கூட்டம், துயிலுமில்ல, மாவீரர் விசேடநிகழ்வு, வேறு அனைத்து நிகழ்வுகளுக்கான அலங்காரங்கள், சமூக சமய, வேறு அரசியல் சார்ந்ததாக இருக்காமல் சிவப்பு, மஞ்சள் நிறங்களைப் பிரதிபலிப்பதாக அமைதல் வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

துயிலுமில்ல மைதான நடுவில், பீடத்தில் சற்று உயரமான பெரிய சுடர் நாட்டப்பட்டிருக்கும். மக்கள் வெள்ளம் உணர்வு கொந்தளிப்போடு மைதானத்தைச் சுற்றி நின்று தியாகங்களை நெஞ்சில் நினைத்திடத் தீச்சுடர் ஏற்றப்படும். பொதுவான ஒருவர் மத்திய சுடரை ஏற்ற மாவீரரின் பெற்றோர் உரித்துடையோர் தீச்சுடரை சமகாலத்தில் ஏற்றுவர். சமகாலத்தில்ஒவ்வொருஇல்லங்களிலும், வாசலிலும்மாவீரரின் சுடர்ஒளியை அனைவரும் ஏற்றுவர்.

சுடரானது சுவாலைவிட்டெரியும். ஒவ்வொரு சுடர்களிலும் மாவீரர்களின் முகங்கள் பிரகாசிக்கும். தமிழர் தாயகம் முழுவதும் சுடரொளி ஓங்கிப்பரவும். மக்கள் குமுறி எழுந்து கண்ணீர் விட்டு நிற்க தியாகிகளின் காவியங்கள் ஒவ்வொரு தமிழ் மக்கள் உணர்வுகளிலும் மீட்டப் படும்.

சுடரேற்றி தியாக தீபங்கள் இவை என்று கூறத்தக்கதாக நினைவு கூரப்பட வேண்டும். வானத்தில் மின்னும் நட்சத்திரங்கள் போல தமிழர் தாயகமெங்கும் மாவீரர் சுடர்கள் இந் நேரத்தில் ஒளிர வேண்டும். சிட்டி விளக்கேற்றக்கூடிய இடங்களில் தொகையான சிட்டி விளக்குகள் ஏற்றி நினைவு கூரலாம். வாசலில் தீபங்கள் எரியும் போது பொது இடங்களில் பெரிய சுடர்களை ஏற்றியும் நினைவுகூர வேண்டும்.

இந்த சுடரேற்றும் நிகழ்வானது, விடுதலைப்பாதைக்கு உறுதியையும், உணர்வையும் கொடுத்து நிற்கின்றது.

## தலைவர் அவர்களின் சிந்தனையிலிருந்து...



**"மாவீரர்**
தேச விடுதலைக்காகத் தம்மை
முழுமையாக அர்ப்பணித்தும்
எதிரி பாசறையை
வெடிகுண்டு கொண்டு தகர்க்கும்
சத்திய வேள்வியில் நித்தமும் வேகி
கொடியது பறந்திட
உயிரினை ஈந்து
உடலை உரமிட்டு
செங்குருதியால்
வரலாறு படைத்து
தமிழர் மண்ணெங்கும்
நினைவுச் சிலைகளாய், ஓவியமாய்
வெள்ளை மலரேந்திய
வேதங்களாய்
ஈழமண்ணில் புதுவிதையாய்
விடுதலையின் தீச்சுடராகி
தேசமெங்கும் சோதியாய் நிற்பவரே
மாவீரராவர்.

## ஏன் இவர்கள் மாவீரர்கள்?

தமிழ் இனவிடிவுக்காய் மரணித்தவர்கள். தேசம் தூங்கியபோது விழித்திருந்தவர்கள். உணர்வுத் தீயை தமக்குள்ளே சிறைபோட்டவர்கள் தேசமக்களின்பாசப்பிணைப்புகளுக்காகதமது பாசங்களைப்பொசுக்கியவர்கள். பள்ளிப்பராயத்தை பள்ளித் தோழருக்காய் பறிகொடுத்தவர்கள்.

ஊரெல்லாம் உறங்கும்வேளை உறக்கமின்றி விழித்தவர்கள் எல்லைசுற்றி வேலிச்சிலையாக நின்றவர்கள் தமது மக்களுக்காக கால்களை, கரங்களை இழந்து நின்றவர்கள்.

## மாவீரர் நாள் நவம்பர் 27

தங்கள் இன்னுயிரை ஈந்து விடுதலைப் போருக்கு வீறு சேர்த்த மாவீரர்கள் அவர்களின் தலைமுறையிலேயே போற்றப்பட வேண்டும். அவர்களின் வீரங்களும் ஈகங்களும் அரும்செயல்களும் மக்களிடத்தில் எடுத்துச் செல்லப்பட வேண்டும். அந்த மாவீரர்களின் பெற்றோர்களும் குடும்பத்தினரும் அவலப்படக் கூடாது என்ற நோக்கின் அடிப்படையில் உருவானதுதான் மாவீரர் நாள்.

விடுதலைப் போருக்கு இன்னுயிரை ஈந்து உரமாகிப் போன மாவீரர்களின் எண்ணிக்கை பத்து நூறு என்ற நிலை மாறி ஆயிரக்கணக்காக உயர்ந்துவிட்ட நிலையில் ஒவ்வொரு மாவீரர்களையும் தனித்தனியாக அவரவர் நினைவு நாட்களில் நினைவு கூருவதைத் தவிர்த்து விடுதலைப் போரின் முதல் மாவீரரான லெப்டினன்ட் சங்கர் அவர்கள் வீரச்சாவடைந்த நவம்பர் 27 ஆம் நாளை பொதுவான நாளாக தேர்ந்தெடுத்து 1989 ஆம் ஆண்டிலிருந்து இத்தினம் அனுஸ்டிக்கப்படுகின்றது.

## மாவீரர் வாரத்தை எதிர்கொள்ளுதல்

மாவீரர் நாளானது தமிழர் எழுச்சி நாளாகத் தமிழ் மண்ணெங்கும் கொண்டாடப்படுகின்றது. எழுச்சி மிகுந்த இந்த மாவீரர் வாரமானது நவம்பர் 21 இல் தொடங்கி நவம்பர் 27இல் முடிவடைகின்றது. இம் மாவீரர் நாட்களை அனுட்டிக்கும் முகமாக நவம்பர் 21 ஆம் நாளுக்கு முன்னதாகவே தமிழர் நிலமெங்கும் புனிதப்பட்டு விடுகிறது. மாவீரர் தூபிகள், நிழற் படங்கள் அமைந்த இடங்கள், இல்லங்கள், ஒழுங்கைகள், வீதிகள், கல்விக்கூடங்கள், பொது இடங்கள், காரியாலயங்கள் அனைத்தையுமே மக்கள் அனைவரும் தனித்தும் ஒருமித்தும் புனிதமாக்கிவிடுகின்றனர். இவையாவும் மாவீரர் நினைவாக அலங்கரிக்கப்பட்டு வடக்கு - கிழக்கு தாயகம் புதுப் பொலிவுடன் விளங்கும்.

## நவம்பர் 27 இரவு நிகழ்வுகள்

**நினைவொலி எழுப்புதல். (6.05 மணி )**

கார்த்திகை 27 அன்று 6.05 மணிக்கு அனைத்து வழிபாட்டிடங்களிலும் மணி ஒலி ஒரு மணித்துளி நேரம் எழுப்பப்படும். உயிர்காப்பு பணியில் ஈடுபடும் ஊர்திகள் தவிர ஏனைய அனைத்து ஊர்திகளும் நிகழ்ச்சி தொடங்குவதற்கு ஏற்ற வகையில் நிறுத்தப்பட்டு அமைதி பேணப்படல் வேண்டும்.

**அகவணக்கம் (6.06 மணி )**

மாவீரர்களுக்கான நினைவொலி நிறுத்தப்பட்டவுடன் 6.06 மணிக்கு மாவீரர்களுக்கான ஒரு மணித்துளி அகவணக்கம் செலுத்தப்படும். இந்நேரம் இல்லங்களிலும், ஏனைய இடங்களிலும் இருக்கும் தமிழ் மக்கள் எழுந்து நின்று மாவீரர்களை நினைவில் நிறுத்தி அகவணக்கம் செலுத்துதல் வேண்டும்.

**ஈகச் சுடரேற்றுதல் (6.07)**

அகவணக்கம் நிறைவுற்றதும் 6.07 மணிக்கு ஈகச்சுடர் ஏற்றப்படல் வேண்டும் (மாவீரர்களின் பெற்றோர் அவரவர் சுடர் ஏற்ற வேண்டிய கல்லறைகள், நினைவுக் கற்களுக்கு முன்னால் 5.15 மணிக்கு நிற்கக்கூடிய வகையில் அனைத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கும்.)

மாவீரர் துயிலுமில்லங்களிலுள்ள மாவீரர் கல்லறைகள், நடுகற்கள் முன்மாவீரர்களின்பெற்றோர், குடும்பத்தினர் அவர்களுக்கென ஒழுங்கு செய்யப்பட்ட இடங்களில் ஈகச்சுடர் ஏற்றுவர்.

இவை தவிர துயிலுமில்லங்களுக்கு வராத பொதுமக்கள் தமது இல்லங்களில், பொது இடங்களில், அலுவலகங்களில், விளையாட்டு இடங்கள், தொழிற்சாலைகள் போன்ற இடங்களில் உரிய நேரத்தில் உரிய முறைப்படி ஈகச்சுடர் ஏற்றும்போது மாவீரர் பாடல் ஒலிக்கப்படும் (மாவீரர் ஈகச்சுடர் ஏற்றப்படும் நேரத்தில் அதன் நோக்கத்தைப் புரிந்துகொள்ளாது வீதிகளில் ரயர்களை எரிப்பதோ அல்லது வேறு வகையில் ஒலி, ஒளி உருவாக்குவதோ தவிர்க்கப்படல் வேண்டும்.



## நிகழ்வு விதிகளில் அலங்காரங்களும் நிறங்களும்

- சிவப்பு, மஞ்சள், நிறங்களைக் கொண்டும் கறுப்பு கரும்புலிகள் தினத்திற்கும் கரும்புலிகள் சம்பந்தமான நிகழ்வுகட்கு மட்டும் கலந்து சோடிக்கலாம்.

- வீரச்சாவு கல் நாட்டலுக்கு சிவப்பு, மஞ்சள் துணிகளைப பாவித்தல் வேண்டும்.

- மேசைவிரிப்பு, பீடவிரிப்புகளும் சிவப்பு, மஞ்சள் துணியாகவே இருத்தல் வேண்டும். வெள்ளைத்துணி பாவிப்பதை தவிர்த்தல் நன்று.

- இச்சோடனைகள் தனித்துவமாக மாவீரர்களின் தற்கொடைத் தியாகம், அமைப்பு இலட்சியங்களை மக்கள் மனங்களில் தோன்றிப் பதிந்து எமது போராட்டத்தின்பால் இணைந்து செயற்பட வழிசமைத்தல் வேண்டும்.

### கடைப்பிடிக்க வேண்டிய சில நடைமுறைகள்
### ஆரம்ப நிகழ்வுகள்

1. பொதுச்சுடர்
2. ஈகச்சுடர்
3. மலர்வணக்கம்
4. அகவணக்கம்

- எமது மாவீரர் நிகழ்வுகள் அமைப்பு நிகழ்வுகள் அனைத்திலும் ஈகச்சுடர் ஏற்றுதல் கட்டாயமாகும். மங்கள விளக்கு ஏற்றக்கூடாது
- அகவணக்கத்துக்கு நேரம் குறிக்கக்கூடாது.

### தவிர்க்கப்பட வேண்டியவை

1. அஞ்சலி, மௌன வணக்கம், மலரஞ்சலி, மங்கள விளக்கு, அஞ்சலியுரை, அஞ்சலிக்கூட்டம், அகவணக்கம் - ஒரு நிமிடம் இரு நிமிடம் எனக்குறித்துக் கூறுதல்.
2. தமிழரின் கலாசார உடை தவிர்ந்த ஏனைய உடையுடன் வருதல் இயன்றளவில் தவிர்க்கப்படல் வேண்டும்.
3. கைத்தொலைபேசி பாவனை துயிலுமில்ல வளாகத்திற்குள் முற்றாக தடை செய்யப்பட வேண்டும்.
4. பணிக்குழுவால் அனுமதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தவிர்ந்த எவரேனும் புகைப்படம் எடுத்தல் ஒளிப்பதிவு நடவடிக்கைகளில் இருந்து விலகி இருத்தல் வேண்டும்.
5. மாவீரர்களின் புனிதத்தன்மையைப் பாதிக்கும் வேறு எவ்வகையான செயற்பாடுகளிலிருந்தும் அனைவரும் முற்றாக விலகி இருத்தல் வேண்டும்.

**போற்றப்பட வேண்டிய பண்பாடாகட்டும்**

எமது வடக்கு கிழக்கு இணைந்த தாயக பிரதேசத்தில் தேசிய நாட்களில் மாவீரர் நாள் மிக முக்கிய நாளாகும். மாவீரர் நாள் என்பது, தமிழரின் விடிவுக்காகவும், உயர்வுக்காகவும், உழைத்து உயிரைத் தற்கொடையாக ஈந்து, இந்த மண்ணிற்கே உரமாகிவிட்டவர்களினதும், எமது மூச்சுடன் கலந்து விட்டவர்களினதுமாகிய நினைவு நாளாகும்.

எங்கள் உயிரிலும் மேலான குழந்தைகளுக்கும் எமது போராளிகளுமான இம்மாவீரர்களின் தியாகம், அவர்களின் உணர்வுகள், இலட்சிய தாகம், கனவுகள் என்பன எம்மால் மறக்கப்பட முடியாதவையாகும், புனிதத் தன்மை வாய்ந்ததுமாகும். காலம் காலமாக நினைவு கூர்ந்து என்றும் போற்றப்பட வேண்டியவையாகும்.

இம் மாவீரர்களின் நினைவுகள் எம்மை வழிநடாத்தும் உந்து சக்தியாக என்றும் இருக்கும் மாவீரர்களினது இத்தகைய நினைவுகூரல் என்பது ஒரு நிகழ்வாக இருந்து விடாது எமது நாட்டு மக்களின் வரலாற்றுச் சுவடியாகவும், பண்பாட்டுக்குரியவையாகவும் வளர்ந்து வரவேண்டும்.

இந்த எமக்குரிய உயரிய நிகழ்வை தத்துவார்த்தமாகவும் உணர்வு பூர்வமாகவும் நிலைநாட்டுவதற்காக எமது தமிழ் மக்கள் அனைவரினதும் மனமுவந்த, ஒருங்கிணைந்த பங்களிப்புக்களை வேண்டி நிற்கின்றோம்.

# தேசியத் தலைவரின் 20 வருட மாவீரர் நாள் உரைத் துளிகள்!



“பிரபாகரன் தனிமனிதன் அல்ல. ஓர் இனத்தின் பிரதிநிதி. பிரபாகரன் தமிழீழத்திற்கு துரோகம் செய்தால் பிரபாகரனும் சுட்டுக்கொல்லப்பட வேண்டியவரே”

“இந்தியா ஒரு இயக்கத்தை மட்டும் நம்பியிருக்க கூடாது என்று எண்ணியது. அதனால் எல்லா இயக்கங்களுக்கும் பயிற்சியளித்து தமக்கு ஒத்துப்போகும் இயக்கங்களை பாவித்து ஒத்துவரா இயக்கங்களை அழிக்க எண்ணியது. அங்குதான் இந்தியா தவறிழைத்தது. அதில் எங்களையும் இணைத்துக்கொண்டது”

**- 1989**

“இந்த மண்ணின் மைந்தர்களை பெற்றெடுத்த பெற்றோர்களை நான் போற்றுகிறேன். உங்களுடைய பிள்ளைகள் தமது உயிருக்கும் மேலாக தாய் நாட்டை நேசித்தார்கள். இந்த உத்தமமானவர்களை புனித இலட்சியத்திற்காக உகந்தளித்த பெற்றோர்களாகிய நீங்கள் நிச்சயம் பெருமை கொள்ள வேண்டும். உங்களுடைய குழந்தைகள் சாகவில்லை. சரித்திரமானவர்கள்”

**- 1990**

“நாம் இனத்துவேசிகள் அல்லர். போர்வெறிகொண்ட வன்முறையாளர்களும் அல்லர். நாம் சிங்கள மக்களை எதிரிகளாகவோ விரோதிகளாக-வோ பார்க்கவில்லை. நாம் சிங்கள தேசத்தை அங்கீகரிக்கிறோம். சிங்கள பண்பாட்டை கௌரவிக்கிறோம்”

**- 1991**

“எமது எதிரிக்கு உலகம் ஆயுதத்தையும் நிதியையும் அள்ளி வழங்குகிறது. நாம் உலகத்திடம் கை நீட்டி நிற்கவில்லை. எவரிடம் தங்கி நிற்கவில்லை. நாம் எமது சொந்த மண்ணில் சொந்த மக்களில் சொந்த கால்களில் தங்கி நிற்கிறோம்”

**- 1992**

“எமது இயக்கம் சமாதான முயற்சிக்கு தடையாக இருந்ததில்லை. சிங்கள அரசுக்கு எத்தனை சந்தர்ப்பங்களை வழங்கினோம். திம்பு முதல் கொழும்பு வரை பேச்சுக்கு சென்றோம். ஆனால் தமிழர் பிரச்சினைக்கு உருப்படியான தீர்வு எதனையும் முன்வைக்க மறுத்தது. சமரச வழியை கைவிட்டு போர்க்களத்தில் தீர்வுகாண விரும்பியது. தமிழர்களின் உரிமைப்போராட்டத்தை பயங்கரவாதம் என சித்திரித்துகாட்டியது. எல்லாவற்றுக்கும் மேலாக இனப்பிரச்சினை என்பதே இல்லை எனபகிரங்கமாக பிரகடனம் செய்துள்ளது”

**- 1993**

“சமாதான வழியில் தமிழர்களின் தேசியப்பிரச்சினைக்கு தீர்வுகாண அரசு முயற்சிகளை எடுக்கும் எனில் நாம் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம். தமிழரின் தேசியப்போரட்டத்தின் இன்றைய வளர்ச்சியை கருத்தில் கொண்டு உருப்படியான சுயாட்சி திட்டங்கள் முன்வைக்கப்படுமாயின் நாம் அதனை பரிசீலனை செய்ய தயாராக இருக்கின்றோம்”

**- 1994**

“யாழ்நகரையும் வலிகாமப் பகுதியையும் ஆக்கிரமிப்பு செய்வதற்கு முன்னர் ஒட்டுமொத்த மக்களும் சென்ற வரலாற்று நிகழ்வானது அரசின் தந்திர உபாயத்திற்கு சாவு மணி அடித்தது. அரசின் போர் நடவடிக்கையையும் அதற்கு அரசு கற்பிற்கும் அபத்தமான காரணத்தையும் யாழ்ப்பாண தமிழ் மக்கள் ஏகமனதாக நிராகரித்து விட்டனர் என்பதையே இந்த இடம் பெயர்வு நிகழ்வு எடுத்துகாட்டுகிறது. ஆக்கிரமிப்பாளனுக்கு அடிபணிந்து போகாமல் சுதந்திர மனிதர்களாக சுயகௌரவத்துடன் வாழ்வதற்கு எவ்விதத் துயரையும் எதிர்கொள்ள எமது மக்கள் துணிந்து நிற்கிறார்கள் என்பதையே இந்த இடம் பெயர்வு உலகத்திற்கு பறைசாற்றியுள்ளது”

**- 1995**

“மூன்றாம் தரப்பு மத்தியத்துவம் என்றும் புலிகளுடன் பேசத்தயார் என்றும் சமீபத்தில் அறிக்கைகளை விட்டுவரும் சந்திரிகா, புலிகள் இயக்கம் ஆயுதங்களை சரணடைவு செய்ய வேண்டும் என்ற கேலிக்கூத்தான நிபந்தனையையும் முன்வைக்கிறார். எந்த ஒரு தன்மானமுள்ள விடுதலை இயக்கமும் இத்தகைய அவமதிப் பூட்டும் நிபந்தனையை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை”

**- 1996**

“மாவீரரின் வீர வழிபாட்டு மரபா-னது தமிழினத்தின் விடுதலைஎழுச்சிக்கு உந்துசக்தியாக இருந்துவருவதாகவும் சிங்கள ஆட்சியாளர்கள் கருதினர். இத்தகைய இனத்துவேசப் பகையுணர்வால் உந்தப்பட்ட சிங்களப் பேரினவாதம் தமிழினத்தால் என்றுமே மன்னிக்க முடியாத ஒரு படுபாதகச் செயலில் இறங்கியது. யாழ்ப்பாணக் குடாநாடு எதிர்ப்படைகளின் பிடியில் வீழ்ந்தபோது இந்த வேதனைக்குரிய சம்பவம் நிகழ்ந்தது. தமிழீழத் தாயின் மடியில் நித்திய உறக்கத்தில் ஆழ்ந்திருந்த எம்மினிய மாவீரர்களின் ஆன்ம அமைதி எதிரியாற் குலைக்கப்பட்டது. அவர்களது கல்லறைகள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. அவர்களது துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்டன. அவர்களது நினைவுச் சின்னங்கள் சிதைக்கப்பட்டன. புனிதர்களாக, சரித்திர நாயகர்களாக, தேசிய வீரர்களாகத் தமிழர்களால் போற்றிப் பூசிக்கப்படும் மாவீரர்களின் புதைகுழிகளை மாசுபடுத்தி, அவர்களது புனிதத் தலங்களான துயிலும் இல்லங்களைச்சிதைத்தழித்த இச் செயலை மிகவும் அநாகரிகமான, கீழ்த்தரமான இழிசெயலென்றே நான் கூறுவேன்”

**- 1997**

“எமது மக்களை அரவணைத்து - இணைத்து - வாழவும் விரும்பாமல், பிரிந்துசென்று தனித்து வாழவும் விடாமல், எமது மக்களை அடிமைப்படுத்தி ஒழித்துக்கட்டவே சிங்கள அரசுகள் முனைந்தன. எனவேதான், அன்று தொட்டு இன்றுவரை ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக, நாம் போராடி வாழ நிர்ப்பந்திக்கப்பட்டோம். வரலாற்றின் கட்டாயங்களுக்கு ஏற்ப எமது போராட்ட வடிவங்கள் மாறிய போதும் எமது உரிமைகளுக்கான எமது சுதந்திர வாழ்விற்கான போராட்டம் தொடர்கிறது. இப் போராட்டம் வளர்ந்து விரிந்து இன்று இருதேசங்கள் மத்தியிலான போராக பேயுருவம் பெற்றிருக்கிறது”

**- 1998**

“போரியற் கலையில் புலிப்படை வீரர்களின் அபாரமான வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் இந்த ‘ஓயாத அலைகள் மூன்று; என்ற வன்னிப் பெரும் சமர் உலகத்திற்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறது”

**- 1999**

“எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் இன்று நாமொரு முக்கிய திருப்பு முனையை அடைந்திருக்கிறோம். எமது படையணிகள் ஒப்பற்ற இராணுவ சாதனைகளை நிலைநாட்டி எமது தேசத்தின் கலாசாரத் தலைநகரான யாழ்ப்பாணத்தின் வாசற்படியை அண்மித்து நிற்கின்றன. யாழ்ப்பாணத்தின் கழுத்தைத் திருகியபடி குடாநாட்டை வன்னி மாநிலத்துடன் துண்டித்து வைத்திருந்த ஆனையிறவுப் பெருந்தளம் புலிப்படை வீரர்களால் மீட்கப்பட்டமை இவ்வாண்டு நாம் ஈட்டிய மாபெரும் இராணுவ வெற்றியாகும்” **- 2000**

“விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டால்தான் இலங்கைத்தீவில் சமாதானம் தோன்றுவதற்கு வாய்ப்புண்டு. இப்படியான சூழ்நிலையிற் ஸ்ரீலங்கா அரசின் அழுத்தத்திற்கு இசைந்து மேற்குலக நாடுகள் எம்மீது தடைகளை இறுக்கினால் அது சமாதானப் பேச்சுக்கும் சமாதான வழியிலான தீர்விற்கும் வழிகோலப்போவதில்லை. மாறாக, சமாதானப் பேச்சுக்குப் புலிகள் மீதான தடைநீங்க வேண்டும் என்ற எமது மக்களின் கோரிக்கைக்கு, இந்நடவடிக்கைகள் மேலும் வலுச்சேர்க்கும்”

**- 2001**

“தமிழர் தாயகத்தில் அமைதி நிலை தோன்றியபோதும் இயல்பு நிலை தோன்றவில்லை. ‘உயர் பாதுகாப்பு வலயங்கள்’ என்ற போர்வையில் எமது மக்களின் வாழ்விடங்களை, சமூக, பொருளாதார, பண்பாட்டு மையங்களை சிங்கள ஆயுதப் படைகள் ஆக்கிரமித்து நிற்கின்றன”

**- 2002**

“எமது இடைக்கால நிர்வாக யோசனைகளுக்குச் சிங்கள இனவாத சக்திகளிடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. தனித் தமிழ் அரசுக்கு அத்திவாரமாக எமது திட்டம் அமைவதாகச் சிங்கள இனவாதக் கட்சிகளும் ஊடகங்களும் கண்டனக் குரல் எழுப்பி வருகின்றன. இந்திய ஊடக உலகத்திலிருந்தும் இந்திய அரசியல் ஆய்வாளர்களிடமிருந்தும் இதே போன்று கண்டன விமர்சனங்களும் வந்து கொண்டிருக்கின்றன”

**- 2003**

“சிறீலங்கா அரசானது எமது விடுதலை இயக்கத்தை ஓரங்கட்டிவிட்டு வாஷிங்டனில் நிகழ்ந்த உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற் பங்குபற்றியது. இதனால், சமநிலைப் பங்காளி என்ற தகைமையிலிருந்து நாம் ஒதுக்கப்பட்டோம். இப்படியான புறநிலையிற்றான் பேச்சுக்களைத் தற்காலிகமாக இடைநிறுத்த எமது இயக்கம் முடிவெடுத்தது. எமது அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் வெளிப்படுத்தவே நாம் இந்த முடிவை எடுத்தோம். பேச்சுக்களை ஒரேயடியாக முறித்து, சமாதான முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட நாம் விரும்பவில்லை”

**-2004**

“சிங்களத் தேசம் இன்னும் மகாவம்ச மனவுலகில், அந்தப் புராணக் கருத்துலகிற் புதைந்து போய்க் கிடக்கிறது. இலங்கைத் தீவானது தேரவாத பௌத்தத்தின் தெய்வீகக் கொடையென்றும் சிங்கள இனத்திற்கே உரித்தான சொத்துடைமை என்றும் மகாவம்சம் திரித்துவிட்ட புனை-கதையிற் சிங்கள மக்கள் இன்னும் சிக்குண்டு கிடக்கிறார்கள்”

**-2005**

“சுதந்திரத்திற்கான இந்தப் போராட்டத்தை விரைவாக ஏற்று அங்கீகரிக்குமாறு நீதியின் வழிநடக்கும் உலகநாடு-களையும் சர்வதேச சமூகத்தையும் நாம் அன்போடு வேண்டுகிறோம்”

**-2006**

“எமது மக்கள் வரலாற்றிலே என்றுமில்லாதவாறு ஒரே தேசமாக, ஒரே மக்களாக ஒரே அணியில் ஒன்றுதிரண்டு நிற்கின்றனர். ஒரே இலட்சியத்தில் ஒன்றுபட்ட சக்தியாக, ஒன்றுபட்ட இனமா-கத் தமக்கு முன்னால் எழுந்த எல்லாத் தடைகளையும் உடைத்தெறிந்து நெஞ்சுறுதியுடன் நிமிர்ந்து நிற்கின்றனர்”

**- 2007**

தமிழர் உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் எந்தக் கோடியில் வளர்ந்தாலும் எமது தேச விடுதலைக்கு உறுதியாகக் குரலெழுப்பி, எமது சுதந்திர இயக்கத்தின் கரங்களைப் பலப்படுத்துமாறு அன்போடு வேண்டுகிறேன். அத்துடன், தங்களது தாராள உதவிகளை வழங்கித் தொடர்ந்தும் பங்களிக்குமாறும் உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்திலே தேச விடுதலைப் பணியைத் தீவிரமாக முன்னெடுத்துவருகின்ற புலம்பெயர்ந்து வாழும் எமது இளைய சமுதாயத்தினருக்கும் எனது அன்பையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்” **-2008**

# முதலாவது மாவீரர் தின உரையில் தலைவர் சொன்னது என்ன?



இதுவரை காலமும் எமது புனித இலட்சியமான தமிழீழ இலட்சியத்துக்காக உயிர்த் தியாகம் செய்த போராளிகளை நினைவு கூரும் முகமாக இந்த மாவீரர் நாளை நாங்கள் ஆரம்பித்துள்ளோம்.

எத்தனையோ உலக நாடுகளில் அந்த நாடுகளின் விடுதலைக்காகப் போரிட்ட படை வீரர்களின், பாதுகாப்புக்காகப் போரிட்ட படை வீரர்களின் நினைவாகவும் இப்படிப்பட்ட மாவீரர் நாட்களை கொண்டாடுவது வழக்கம். உங்களுக்குத் தெரியும் இதுவரை காலமும் எமது இயக்கத்தில் வீரச்சாவு அடைந்த ஒவ்வொரு போராளிக்குமாகத் தனிப்பட்ட நினைவு நாளைக் கொண்டாடுவது வழக்கம். வீரச்சாவு அடைந்த எல்லோரையும் மொத்தமாக வருடத்தில் ஒரு நாள் நினைவு கூர்ந்து அந்த நாளையே மாவீரர் நாளாகப் பிரகடனப்படுத்தி உள்ளோம்.

அதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. அதாவது எங்களது விடுதலைப் போராளிகளில் முதலாவதாக வீரச்சாவு அடைந்த சங்கரின் நினைவு தினமாக மாவீரர் நாளை நாங்கள் பிரகடனப்படுத்தி உள்ளோம்.

அத்தோடு வழமையாக எங்கள் மக்களில் ஒரு பழக்கம் உண்டு. உயர்ந்த பதவிகள், வசதியானவர்கள் இப்படிப்பட்டவர்களைத் தான் பெரிதாகப் பார்க்கும் பழக்கம் உண்டு. அதுபோல்எமதுவிடுதலைப்போராட்டத்திலும் தலைவர்களை மட்டும் பிரித்து அவர்களது செய்கைகளை மட்டும் பெரிதாகப் பார்க்கக் கூடாது என்பதற்காகவும் எல்லாப் போராளிகளும் சமம் என்னும் ஓர் நோக்கத்துடனும் இந்த நாளை கொண்டாட முடிவு எடுத்துள்ளோம். அதாவது எமது போராளிகளை நினைவு கூரும் தினத்தை ஒருநாளில்வைப்பதால்எல்லோரும்அன்றுஎமது இயக்கத்தில் வீரச்சாவு அடைந்த தலைவர்களில் இருந்து சாதாராணமாகப் போராடி வீரச்சாவு அடைந்த உறுப்பினர் வரை எல்லோரையும் சமமாகத்தான் கருதுகிறோம் என்பதுடன், வீரச்சாவு அடைந்த எல்லாப் போராளிகளின் நினைவு நாட்களையும் ஒன்றாக நினைத்து மாவீரர் நாளாக கொண்டாடுகிறோம். காலப் போக்கில் குறிப்பிட்ட சில ஆட்களுக்கே முக்கியத்துத்துவம் கொடுக்கப்படும் நிலை தடுக்கப்பட்டு எல்லோருமே சமமாக ஒரே நாளில் நினைவு கூரப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மாவீரர் நாளைக் கொண்டாடுவதற்கு முடிவெடுத்தோம். ஓர் இனத்தைப் பொறுத்தவரை வீரர்களையும் அறிவாளிகளையும் பெண்களையும் மதிக்காத ஓர் இனம் காட்டுமிராண்டி இனமாகத்தான் மாறி அழிந்து விடும். எங்களுடைய இனத்தில் அறிவாளிகள் இருக்கிறார்கள். மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது எங்கள் இனத்தில் பெண்கள் புனிதமாக மதிக்கப்படுகிறார்கள்.

அதே வேளை வீரர்களுக்குத் தான் பஞ்சமாக இருந்தது. ஆனால் இன்று இந்த மாவீரர் நாளில், ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி விட்டோம். ஆம், எமது வீரர்களைக் கூட நாம் கௌரவிக்க ஆரம்பித்துள்ளோம். இதுவரை காலமும் எங்களுடைய இனத்தில் வீரர்கள் என்றால் யார் என்று கேட்கும் நிலை இருந்தது. நாம் எம் இனத்தின் வீரர்களை நினைவு கூரும் நாள் ஒன்றை உருவாக்கியுள்ளோம். எனவே இனி எமது இனம் நிச்சயமாக அழியாது.

எமது இனம் உலகிலேயே தலை நிமிர்ந்து இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் எமது 1307 போராளிகளின் உயிர்த்தியாகம் தான். அவர்களுடைய வீரமான, தமது உயிரையே மதியாது போராடிய உண்மையான தியாகம் தான் எங்களுக்கு உலக நாடுகளில் ஒரு மரியாதையை ஏற்படுத்தியுள்ளது. எனவே இந்த மாவீரர் நாளை நாங்கள் எங்களுடைய வாழ்நாளில் முக்கியமான விழாவாக இன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் கொண்டாட ஆரம்பிக்க வேண்டும்.”

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!.

(1989இல் முதலாமாண்டு மாவீரர் நாள் விழாவில் மேதகு பிராபாகரன் ஆற்றிய உரையின் ஒரு பகுதியே மேற்படி உரையாகும். அன்று முதல் பிரபாகரன் அவர்கள் மாவீரர் நாள் உரையை 2008ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 20 ஆண்டுகள் நிகழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.)





# மாவீரர் துயிலும் இல்லங்கள்



**மட்டக்களப்பு:**
தரவை
தாண்டியடி
கல்லடி
மாவடி

**கிளிநொச்சி:**
கிளிநொச்சி
முழங்காவில்
வவுனியா:
ஈச்சங்குளம்

**முல்லைத்தீவு:**
முள்ளியவளை
அலம்பில்
ஆலங்குளம்
வன்னி விளான்குளம்
விசுவமடு
இரணைப்பாலை

**அம்பாறை:**
கஞ்சிகுடிச்சாறு

**மன்னார்:**
ஆட்காட்டி வெளி
பண்டிவிரிச்சான்

**யாழ்ப்பாணம்:**
கோப்பாய்
கொடிகாமம்
சாட்டி (வேலணை)
எள்ளங்குளம்
உடுத்துறை

**திருகோணமலை:**
பெரியகுளம்
ஆலங்குளம்
உப்பாறு
தியாகவனம்

மொழியாகி, எங்கள் மூச்சாகி, நாளை
முடிசூடும் தமிழ் மீது உறுதி.
வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன்
வரலாறு மீதிலும் உறுதி.
விழிமூடி, இங்கே துயில்கின்ற வேங்கை
வீரர்கள் மீதிலும் உறுதி.
இழிவாக வாழோம், தமிழீழப் போரில்
இனிமேலும் ஓயோம் உறுதி.

தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப் பேழைகளே! – இங்கு
கூவிடும் எங்களின் குரல்மொழி கேட்குதா?
குழியினுள் வாழ்பவரே!
உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள்
உறவினர் வந்துள்ளோம் – அன்று
செங்களம் மீதிலே உங்களோடாடிய
தோழர்கள் வந்துள்ளோம்.


எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

நள்ளிரா வேளையில் நெய்விளக்கேற்றியே
நாமும் வணங்குகின்றோம் – உங்கள்
கல்லறை மீதிலெம் கைகளை வைத்தொரு
சத்தியம் செய்கின்றோம்
சாவரும் போதிலும் தணலிடை வேகிலும்
சந்ததி தூங்காது – எங்கள்
தாயகம் வரும் வரை தாவிடும் புலிகளின்
தாகங்கள் தீராது.

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

உயிர்விடும் வேளையில் உங்களின் வாயது
உரைத்தது தமிழீழம் – அதை
நிரை நிரையாகவே நின்றினி விரைவினில்
நிச்சயம் எடுத்தாள்வோம்
தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும்
தனியரசு(சு) என்றிடுவோம் – எந்த
நிலைவரும் போதிலும் நிமிருவோம் உங்களின்
நினைவுடன் வென்றிடுவோம்.

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.


No One Beat
Our Price
List of works
* Fence
Timber fence
Colorbond fence
Aluminum slat and picket fence
Metal fence and auto gates
* decking
Merbau decking
Composite decking
* Landscaping
PROACTIVE RENOVATION SERVICES
Contact : 1800 960 162


"LANKA" ASTROLOGY CENTRE
PANDIT: ADI GURUKUL
வாழ்க்கையின் நம்பிக்கை
உங்கள் புதிய வாழ்க்கை,
புதிய நாளுக்கு ஹலோ சொல்லுங்கள்
உங்கள் புதிய மகிழ்ச்சியை
ஏற்றுக்கொள்ளுங்கள்
சூனியத்தை 100% அகற்றுவதற்காக,
துரதிர்ஷ்டம் மற்றும் தீய ஆவிகளிடமிருந்து
பாதுகாக்க நாடுங்கள்
விருப்பத்திற்குரியவற்றை
மீண்டும் அழைத்து வருவதில் வல்லுநர்
அனுபவம் வாய்ந்தவரின் கைரேகை பார்த்தல், முக வாசிப்பு, எண் கணிதம்,
புகைப்பட வாசிப்பு, ஜாதகம் மற்றும் அதிர்ஷ்ட எண்கள் பார்வை
அனைத்து பிரச்சினைக்கும் இங்கே தீர்வு உண்டு
ஆரோக்கிய பிரச்சினை
காதல் பிரச்சினை
உறவுமுறை
கல்விப் பிரச்சினை
தீய பார்வை
நிதி மற்றும் வியாபாரம்
தொழில் மற்றும் பணப்பிரச்சினை
பொறாமை, சாபம்
இருண்ட கனவு
திருமண பிரச்சினை
கணவன் - மனைவி
குழந்தயின்மை
விவாகரத்து
குடும்ப விவாதம்
பில்லி சூனியம்
எதிரிகள் போன்ற...
அனைத்து பிரச்சினைகளுக்கும்
இங்கே தீர்வு உண்டு
CALL FOR AN APPOINTMENT +61 426 954 355
Melbourne Victoria Email : adithyasharma138@gmail.com
PRAVATE & CONFIDENTIAL



Mahaweli
Sri Lankan
Seafood Taste
from the Indian Ocean
FRESH FISH
WILD CAUGHT
Mahaweli
+61 404200150
www.mahaweli.com.au


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்போர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
LuckyJewelleryMelborne
luckysankaran@gmail.com
0387121974, 0415233284

எஸ்.எஸ். ஜோதிட நிலையம்
பண்டித்: தேஜா ஜி
PANDIT: TEJA JI

உலகப் பிரசித்தி பெற்ற
இந்தியாவின் பரம்பரை
கைரேகை ஜோதிடரைச்
சந்தியுங்கள்.






100%
சரியான
கணிப்பு

- திருமண பாக்கியம்
- நீதிமன்ற வழக்குகள்
- குழந்தைகள் பிரச்சினை
- அதிர்ஷ்ட எண்கள்
- கல்வி விஷயங்கள்
- லக்ஷ்மி பூஜா
- வேலைப் பிரச்சினைகள்
- வஸ்து பூஜா
- வணிக சிக்கல்கள்
- அதிர்ஷ்ட கல்

என் தொழிலை
எவராலும்
உடைக்கவும்
முடியாது. எனக்கு
முன் எவராலும்
வேலை செய்யவும்
முடியாது. இது
எனது சவால்.

எந்தவொரு சிக்கலையும் சரிசெய்யவும், உடைக்க முடியாத பாதுகாப்பை வழங்கவும் அவர் சக்திவாய்ந்த இந்திய பிரார்த்தனைகளை செய்கிறார்.

உலகப் பிரசித்தி பெற்ற இந்திய ஜோதிடர் பண்டித் தேஜா ஜீயைச் சந்தியுங்கள்.
உங்கள் தனிப்பட்டதோ, பொதுவானதோ அனைத்து வகையான பிரச்சினைகளையும் சில நாட்களிலேயே தீர்த்து வைப்பார்.

தீர்க்க முடியாத பிரச்சினைகளைத் தீர்த்து 100 வீதம் நம்பிக்கையை அவர் கொடுப்பார்.

சிறப்பான எதிர்காலத்துக்காக
இன்றே வாருங்கள்

முற்பதிவுகளுக்கு அழையுங்கள்

0405075655

2a, chandler road,
noble Park, 3174.
Location: Dandenong

# ஆஸ்திரேலிய குடிவரவுத்துறை சட்டம்

**சட்டத்தரணி - த.நா.ஜெயராசசிங்கம்.**
இவர் முன்னாள் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட உதவி விரிவுரையாளர். பின்னர் பிரிட்டனில் சட்டம் பயின்று சட்டத்தரணியாகத் தேர்ச்சி பெற்றவர். பின் ஆஸ்திரேலியா மொனாஷ் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றார். அதன் பின்னர் ஆஸ்திரேலியா விக்ரோறியா மாநிலத்தில் வழக்கறிஞராகத் தகுதிபெற்றவர். தற்போது சட்டம் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்

ஆஸ்திரேலிய குடிவரவுத்துறை அமைச்சருக்கு உள்ள சில தனிப்பட்ட அதிகாரங்கள் பற்றி இம்மாத இதழில் பார்ப்போம்.

ஒரு நபர் ஒரு விசாவுக்கான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யத் தவறிய போதும் பொது நன்மை கருதி குடிவரவுத்துறை அமைச்சர் அந்நபருக்கு விசாவினை தனிப்பட்ட தனது அதிகாரத்தின் மூலம் வழங்க சட்டம் இடமளிக்கிறது.

இந்த அதிகாரம் அமைச்சர் தலையீடும் அதிகாரம் (ministerial intervention pover) என குறிப்பிடப்படுகிறது.

அமைச்சர் தலையிடும் இவ்வதிகாரம் அமைச்சரினால் தனிப்பட்ட ரீதியில் பிரயோகிக்கப்படல் வேண்டும். இவ்வதிகாரம் பின்வரும் சந்தர்ப்பங்களில் மட்டுமே பிரயோகிக்கப்படல் வேண்டும்.

- *195* A குடிவரவுத்துறை சட்டப்பிரிவின்படி தடுப்புக்காவலில் உள்ள ஒருவருக்கு அவர் மீளாய்வு அமைப்பினால் ஒரு தீர்மானம் பெற்றவரோ அல்லவோ அமைச்சரோ தலையிட்டு விசாவை வழங்க முடியும்.
- *351* k S *417* இன் சட்டப்பிரிவின் படி (AAt) நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபையின் முடிவை மாற்றி ஒரு நபருக்கு சாதகமான முடிவினை அமைச்சர் வழங்க முடியும்.
- *501* N பிரிவின் படி (AAT) நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபையினால் நடத்தையை காரணம் காட்டி பாதுகாப்பு விசா நிரகரிக்கப்பட்ட அல்லது ரத்து செய்யப்பட்ட தீர்மானத்தினை விண்ணப்பதாரிக்கு சாதகமான முடிவாக அமைச்சர் பதிலீடு செய்ய முடியும்

அமைச்சரின் தலையீடுள்ள இவ்வதிகாரமானது தற்துணிவு அதிகாரமானதாகும்.

அமைச்சரை இவ்வதிகாரத்தை பிரயோகிக்கும் படி வற்புறுத்த முடியாது.

இவ்வாறு அமைச்சர் தலையிட்டு ஒரு விசாவை வழங்கினால் அம் முடிவை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பார்.

பெருமளவான வேண்டுகோள்கள் அமைச்சருக்கு விடப்பட்ட போதிலும் கடந்த காலத்தில் சிறுதொகையான விசாவே அமைச்சரினால் அங்கீகாரமளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் அமைச்சர் இவ்வதிகாரத்தை பயன்படுத்துவதைப்பற்றி வழிகாட்டிகளை வெளியிட்டுள்ளார். இவ்வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்ட தனித்துவமானதும் விசேடமானதுமான சந்தர்ப்பங்களில் மட்டுமே அமைச்சர் தனது அதிகாரத்தை பயன்படுத்துவார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட தனித்துவமும் விசேடமானதுமற்ற விண்ணப்பங்கள் அமைச்சரால் நிராகரிக்கப்படும்.

ஒரு விண்ணப்பதாரி இன்னொரு விசாவைப் பெற முடியும் எனில் அமைச்சர் அவ் விண்ணப்பத்தை நிராகரிப்பார். மேலும் குடிவரவுத்திணைக்களத்துடன் ஒத்துப் போகாதவர்களின் விண்ணப்பங்கள் (non corporation) நிராகரிக்கப்படும் அல்லது சாதகமாக கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

பொய்யான மற்றும் பிழையான வழிகாட்டும் (false or misleading) தகவல்களை வழங்கியவர்களின் விண்ணப்பங்கள் சாதகமாக பரிசீலிக்கப்பட மாட்டாது.

அமைச்சரின் வழிகாட்டுதல்கள் தனித்துவமானதும் அதிவிசேடமானதும் விண்ணப்பங்களே அமைச்சரின் அங்கிகாரத்துக்கு சமர்ப்பிக்கப்படும் என குறிப்பிடப்படுகின்றது எனப்பார்த்ததோம். இப்போது தனித்துவமானதும் அதிவிசேடமானதும் என்ற தொடரின் பொருள் என்ன என்று உதாரணங்கள் மூலம் பார்ப்போம். அமைச்சரின் வழி காட்டுதல்கள் சில உதாரணங்களை முன்வைக்கின்றன. பின்வரும் உதாரணங்கள் அமைச்சரின் வழிகாட்டுதல் பட்டியலில் உள்ளன.

குறிப்பிட்ட நபர் நன்நடத்தை என்ற காரணத்துக்காக பாதுகாப்பு விசாநிராகரிக்கபட்டட்டு அல்லது மறுக்கப்பட்ட போதும், ஆஸ்திரேலியாவின் திருப்பி அனுப்பக்கூடாது (non – refoulement) என்ற கடப்பாட்டுக்குள் உள்ளடக்கப்பட்டார் என்றால் அவருக்கு அமைச்சர் விசாவை வழங்குவார்.

ஒரு நபர் அவரது குடியுரிமை உள்ள நாட்டுக்கு அல்லது சாதாரண வதிவிட நாட்டுக்கு திரும்ப முடியாத சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட நபர் எனில் அவருக்கு அமைச்சர் விசாவை வழங்கலாம்.

குறிப்பிட்ட நபரை ஆஸ்திரேலியாவில் இருக்க அனுமதித்தால் ஆஸ்திரேலியாவுக்கு பொருளாதார , விஞ்ஞான , கலாசார அல்லது வேறு ஏதாவது நன்மை பெருமளவில் வந்து சேரும் என்றால் அமைச்சர் அந்நபருக்கு விசாவை வழங்குவார்.

ஒரு நபரது வயது உடல் நிலை அல்லது மனநிலை காரணமாக அந்நபரை அவரது சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பினால் அந்நபருக்கு கடும் கஸ்டம் ஏற்படும் என்றால் அமைச்சர் அந் நபருக்கு விசாவை வழங்கலாம்.

குறிப்பிட்ட நபரின் விண்ணப்பமானது தொடர்புடைய சட்டத்தினால் எதிர்பார்க்கப்படமுடியாத விளைவினை ஏற்படுத்தினால் அல்லது தெளிவாக சட்டத்தின் நோக்கத்துக்கு அப்பாற்பட்ட நிகழ்வினை ஏற்படுத்தி உள்ளது என்றால் அமைச்சர் அந்நபருக்கு விசாவை வழங்கலாம்.

பாதுகாப்பு விசாவை பெறக்கூடிய துன்பம் ஒருவருக்கு ஏற்பட்டிருக்கவில்லை எனினும் அவர் சொந்த நாட்டுக்கு அனுப்பப்பட்டால் அவருக்கு கடும் துன்பம் மனித உரிமை மீறல் அல்லது உயிராபத்து ஏற்படும் எனில் அமைச்சர் அவருக்கு விசாவை வழங்கலாம்.

கடும் சூழ்நிலையால் குறிப்பிட்ட நபர் திருப்பி அவரது சொந்த நாட்டுக்கு அனுப்பப்பட்டால் அதன் விளைவாக ஆஸ்திரேலிய குடிமகனுக்கு அல்லது ஆஸ்திரேலிய குடும்பம்ஒன்றுக்கு தொடர்ச்சியான மாற்றமுடியாத துன்பம் நேரிடும் எனில் அமைச்சர் அக் குறிப்பிட்ட நபருக்கு விசாவை வழங்கலாம்.

மேற்குறிப்பிட்ட உதாரணங்கள் அமைச்சரின் வழிகாட்டுதல் பட்டியலில் உள்ளன. இதனைவிட வேறு சந்தர்ப்பங்களிலும் சில நேரங்களில் சில விண்ணப்பங்களும் அமைச்சரினால் விண்ணப்பிக்கப்படும்.

( தொடரும் )


Best Start
Best Life
PLATFORM 3
இலவச பாலர் பள்ளி: 2024 க்கு உங்களின் பிள்ளையைப் பள்ளியில்சேருங்கள்
விக்டோரியாவில் மூன்று, நான்கு வயதுடைய எல்லாப் பிள்ளைகளுக்கும் இலவச பாலர்பள்ளி கிடைக்கும். இதனால், ஒரு பிள்ளைக்கு ஆண்டொன்றிற்கு ஒருமுறை $2500 வரை குடும்பங்களுக்குச் சேமிப்பாகும்.
இரண்டு ஆண்டுகள் பாலர்பள்ளியில் கற்பது உங்கள் பிள்ளையின் திறன்களை மேம்படுத்த உதவுவதால் அந்தப்பிள்ளை பாடசாலையிலும், வாழ்க்கையிலும் திறமையாகச் செயற்படும்.
பாலர்பள்ளி அனைவருக்கும் இலவசமாகும். 'ஹெல்த் கெயர் காட்' (Health Care Card) அல்லது ஆஸ்திரேலிய குடியுரிமை (அல்லது இதைப்போன்றது) உங்களுக்குத் தேவையில்லை
vic.gov.au/kinder/tamil இல் அதிக தகவல்களைப் தேடிப்பார்க்கவும்.
THE EDUCATION STATE
VICTORIA State Government
Department of Education
KINDERGARTEN Victorian Government Approved


CEYLON EXPRESS
MONEY TRANSFER
Best Rates Guarantee
Same Day Bank Transfer
Responsible Customer Support
Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052

ஊழிக்காலம்-2

50



# புயலுக்குப்பின்...



திருமணமான, திருமணமாகாத காதல் சோடிகளுக்கு விவாகம் செய்து வைக்க மகிந்த அரசு திருவுள்ளம் கொண்டு அவர்களுக்கான திருமண வைபவம் ஒன்றை ஏற்பாடு செய்தது.

இந்து, கிறிஸ்தவ முறைப்படி அவரவர் மதங்களுக்கான முறையில் திருமண ஏற்பாடுகள் நடைபெற்றன சோடிகள் நூறாக இருந்து எழுபதாகி, ஐம்பதாகி இறுதியாக விழா நடாத்தப்பட்டது. மணமக்களுக்கு அமைச்சர் ஒருவர் தலா முக்கால் பவுண் தங்கச்சங்கிலி அன்பளிப்புச் செய்தார். தாலி கட்டுவதாகக் கூறிய போதும், அது சமத்துவம் கருதி கைவிடப்பட்டு திருமணப்பதிவுடன் மாலை மாற்றி திருமணம் நிறைவேற்றி வைக்கப் பட்டுள்ளது. அமைச்சரால் வழங்கப்பட்ட முக்கால் பவுண் கவறிங் தங்கச் சங்கிலி. சில நாட்களில் பல்லை இளித்தது. தம்பதிகளுக்கென தனி வீடுகள்? தரப்பாள் கொட்டில்கள் வழங்கப்பட்டாலும்,உணவு பொதுவான-தாக சமைக்கப்பட்டதும், காலைமுதல் மாலை வரை ஆண்கள் வேலைக்கு அழைக்கப்பட்டதும் வாழ்க்கையை சுகிக்க விடவில்லை.

இது முற்றிலும் உண்மை, இயக்கத்தில் நடந்தது. ஒரு பெண் ஒரு காவல்துறைப் புலனாய்வாளனை காதலித்தாள். பெற்றவள் எதிர்ப்பில்லாமையால், அவன் அடிக்கடி வீட்டுக்கு வந்து போனான். விளைவு அந்தப்பெண் கர்ப்பமானாள். அதே சமயம் வேறொரு பிரச்சினை தொடர்பாக அவன் 'பணிஸ்மென்றில்' வட்டுகவாகலுக்கு விடப்பட்டான்.

அவனுடைய காதலி பொறுப்பாளரை சந்தித்து தன் நிலையை கூறி அவனைத் திருமணப்பதிவு செய்த பின் தண்டனை வழங்குங்கள் எனக் கேட்டாள்.

பொறுப்பாளர் அவனை விடவே முடியாது என்று கூறிவிட்டார். அவள் பெண்கள் புனர்வாழ்வுமையத்தில் முறைப்பாடு செய்தாள். பலன் எதுவுமில்லை. அவர்களுக்கும் காவல் துறைப் பொறுப்பாளர் அசையவில்லை. ஆயிற்று இன்னும் ஒரு மாதம். ஆனால் அவள் வேலை செய்யும் அலுவலகத்தில் கர்ப்ப விவகாரம் தெரிந்துபோய்விடும். அவள் அண்ணனும் இயக்கத்தில் முக்கியமான பொறுப்பில் இருந்தான். அவனுக்கும் இது அவமானமாகி விடும். இவள் தற்கொலைக்குத் தயாரானாள். இந்த சமயத்தில் பார்வதியின் மருமகளும் அவளுடன் வேலை செய்தாள். அவள் அந்தப் பெண்ணை பார்வதியிடம் அனுப்பினாள். நோக்கம்கருவைக்கலைக்கலாமா..?என்பதாகும். கதையைக் கேட்ட பார்வதிக்கு பற்றிக் கொண்டு வந்தது. 'எழுது எல்லாத்தையும் தலைவருக்கு எழுதித்தா.' என எழுதி வாங்கினாள். தானும் ஒரு சிறு குறிப்பை வரைந்து அதனுடன் சேர்த்து வட்டக்கச்சி வீதியில் காத்திருந்தாள். ஏரம்பு மாஸ்டர் ,மதிவதனிஅல்லது பெரியாள் யாராவது வரலாம் என்ற எதிர்பார்ப்பு வீணாகவில்லை. முதலில் வந்தது மதிவதனி. கடிதம் கைமாறியது.

மறுநாள் மத்தியானம் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு உறுப்பினர்கள் வீட்டுக்கு வந்தனர்.

“அந்தாள் கதைக்கையுக்கயே அதட்டுது அன்ரி.பயமாக்கிடக்கு” (அந்தாள் காவல்துறை பொறுப்பாளர்.)

“ஓ. அப்படியோ.. வாங்கோ நான் வாறன்.” பார்வதி கூடப் புறப்பட்டாள். தலைவரின் கட்டளை அங்கும் வந்திருந்தது. பதினைந்து நாட்களுக்குள் முகூர்த்தம், எண்பதடி பந்தல் அலங்காரம், திருமணத்துக்காக ஒரு மாத லீவு வழங்குவதுண்டு, அந்தவிடுமுறையோடு அவனது 'பணிஸ்மென்ற்' ரத்துச் செய்த தலைவர் சொன்னார். ‘அந்தப் பிள்ளைக்கு கலியாணத்தை செய்து வச்சிட்டு புருசனைப் பிரிச்சுக் கொண்டு போறது சரியில்ல’ இதையே சரணடைந்த இராணுவத்தானின் மனைவி கர்ப்பமான போதும் தலைவர் கூறினார்.

என்னதான் சொன்னாலும் தலைவர் இருந்த இடத்தை யாராலும் நிரப்பமுடியாது. பார்வதிக்கு இந்த திருமணச்சோடிகள் திருமணத்தின் பின் விடுவிக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை.

இந்தச் சோடிகளை அவர்களது வாழ்க்கை அனுபவங்களை முகாமில் வைத்தே பேட்டி எடுத்து வானொலிகள் தென்றல், வசந்தம் என்பவை ஆகா ஓகோ எனப் புகழ்ந்து தள்ளின.

இன்று பதின்நான்காம் திகதி நேற்றைய தினம் பிள்ளைகளைக்காண வந்தவர்களில் அநேகர் பார்க்காமலே திரும்பிப்போய் விட்டனர். அவர்கள் இன்று வரக்கூடும். பெற்றோரையும் உற்றாரையும் ஆவலுடன் எதிர் பார்த்துக் காத்திருந்த காரணம் ! எனக்கொரு “செல்பேசி” தான். பார்வதிக்கும் மகள் வந்திருந்தாளா? தெரியவில்லை. ஆனால் நேற்று வந்தவர்கள் செய்த அமளிதுமளியில் திரும்பிப் போயிருக்கலாம்.

மந்திரி வந்து போன பின் பெற்றோரை உள்ளே விட்டு பதிவதற்கு வசதியாக பத்துப் பத்து போராக உள்ளே விடச் சொன்னார்கள். ஆனால் அந்த கம்பிக் கடவையை உடைத்து போல மேவிய சனத்தை கிழவிமேடம், “ உள்ளே விட்டிட்டு பதியுங்கள்” என்றாள்

முடியுமா? புற்றீசல்கள் போல திமுதிமுவென பெற்றோர் நுழைய பிள்ளைகள் தம் சொந்தங்களிடம் ஓட பதிவு செய்பவர்கள் எதுவும் தோன்றாமல் உட்கார்ந்து விட்டனர். ஒரு ஆமிக்காரி எல்லோரிடமும் 'வள்ளென்று' பாய்ந்தாள். கிழவிமேடம் அவளை அதட்டி அப்பால் போக வைத்தாள்.

இந்த முரண்பாடுகளின் அடிப்படையில் அங்கு நின்ற அனைத்து பெண் ராணுவமும் இவர்களை பழையபடி எதிரியாகவே பார்த்தார்கள் போல தெரிந்தது. அடுத்த நிகழ்ச்சி

அங்கே தெருச் சென்றியில் நிற்கும் ஒரு ராணுவப் பெடியனிடம் ஒரு பிள்ளைக்கு சின்ன நட்பு. போகும் போதும் வரும் போதும் சாப்பிட்டாச்சா..? சுகமா..? என கையாலும் கண்ணாலும் விசாரிப்பாள். அவனும் புன்னகையோடு சாடை காட்டுவான். ஒரு ஆமிக்காரியும் அவன் மீது அக்கறை கொண்டிருந்தாள்.

இவர்கள் தெருக்கரை மாடிக் கட்டடத்தில் உள்ளவர்கள். கடும்புழுக்கம் என்றால் பின் புறம் தெருப்பக்க வராண்டாவில் வந்து பேசிக் கொண்டிருப்பார்கள். ஒரு வேலையாக அவ்வழியே வந்த ஆமிக்காரியின் கண்ணில் அவர்கள் ஜாடையில் பேசிக் கொண்டிருந்தது பட்டு விட்டது. அவள் பின் விறாந்தை வழியே நடந்து போவது போல போய் படுத்திருந்த பிள்ளையை ஓங்கி பூட்ஸ் காலால் தட்டிவிட்டாள். அவள் திடுக்கிட்டு திரும்புமுன் நடு அறையூடாக ஆமிக்காரி அடுத்தபக்கம் போய் விட்டாள்.

இதை கேற்றருகே நின்ற ஆண் இராணுவத்தினரும் பார்த்தனர். பெண்கள் உசாராயினர். மறுபடி அரை மணித்தியாலத்தில் அவள் மீண்டும் வந்தாள். பெண்கள் சிலர் ஓடி நடை பாதை அறையின் பின்கதவைப் பூட்டி விட்டு மறுபக்கம் போய் விட, அடிபட்டவள் அறையுள் நின்றாள். ஆமிக்காரி திமிராக கையை விசுக்கியவாறே வராண்டாவூடாக நடை பாதை அறையுள் நடந்தாள். அறை இருளாக இருந்தது திடீரென பின்புறமிருந்து அவளை இழுத்து படபடவென அறைந்து விட்டு வெளியேறிய அடிபட்டபெண் எதுவுமே நடவாதது போல இருக்கவில்லை.உடனேயே ஓடி “பெரிய சேரின்” அலுவலகத்தில் போய் தன்னை ஆமிக்காரி அடித்ததாக புகார் செய்ததுடன் வாசலில் சென்றி நின்ற ஆமிக்கும் தெரியும் என்று கூறினாள்.

அசைக்க முடியாது. ஆமிக்காரன் சாட்சி சொன்னான். “இவள் காலால் ஓங்கி அடித்தாள்” என்றான். அந்தப் பெண்ணின் ஆடையில் பூட்ஸ்கால் தடம் செம்மண்ணுடன் பதிந்திருந்தது. பாவம் இருட்டில் ஆமிக்காரி வாங்கிய அடி இருட்டடிப்புச் செய்யப்பட்டு விட்டது,

அன்று மாலையே அனைத்து ஆமிப் பெண்களும் வேறிடத்துக்கு மாற்றப்பட்டனர். புதிய ஆமிக்காரிகள் வந்தனர். வந்தவர்கள் பிள்ளைகளுடன் நட்பாகி அமைதியாவும் பழகினர். அவர்களுடன் இவர்கள் மிகவும் நேசித்த “மேஜர் சூட்டி” வந்தாள். இவளுடைய விசேடம் என்னவென்றால் அலுவலகத்தில் இவளது பதவிக்கென ஒதுக்கப்பட்ட அறையில் தூங்க மாட்டாள். பிள்ளைகளுடன் தான் ஒரு அறையில் தூங்குவாள். மாலையில் பிள்ளைகளுடன் விளையாட மற்ற ஆமிப்பெண்களையும் கூட்டி வருவாள்.

இரவில் காணும் கனவுகள் எல்லாவற்றையும் பார்வதியிடம் சொல்லி அது நல்லமா? கெட்டதா..? என்று அலட்டி அலட்டி கேட்பாள். புதிதாக திருமணமானவள். அவள் மேஜர் அவளுடைய புருசன் கப்டன் தர அதிகாரி என்பாள். காதலித்து கலியாணம் செய்தாள். தன் கணவன் தன் மீது கொள்ளை அன்பு வைத்திருக்கிறான். தானும் அவனிடம் அப்படி தான் என்பாள்.

வயோதிபர்களான ஐம்பது வயதுக்கு மேற்பட்டோர் விடுதலை செய்யப்பட்டு விட்டனர். பார்வதிக்கு எந்த முடிவும் இல்லை. நடை பாதையில் இருமருங்கும் நட்டிருந்த சவுக்கு மரங்களின் அடியில் கூட்டங் கூட்டமாக குந்தியிருந்து பேசிக் கொண்டிருப்பது அனைவரும் செய்வதுதான். பார்வதியும் அன்று சோர்ந்து போய் அந்த மரத்தின் கீழ் இருந்தாள்.

இரு வாரங்களுக்கு முன் தான் பூசாவிலிருந்து வழக்கு முடிந்து புனர்வாழ்வுக்காக அனுப்பப் பட்ட எழுத்தாளர் இருந்தாள்.

பூசா வாழ்க்கையைப் பற்றி கதை கதையாகச் சொன்னார்கள். பார்வதியின் பேத்தியைச் பற்றி அவர்களிடம் எந்த தகவலும் இல்லை.

இங்கேயுள்ள சக பெண் கைதிகள் பற்றியே நிரம்பப் பேசினார்கள். எனினும் அவளும் ஒரு எழுத்தாளர் என்பதால் கேட்டதை எழுதுவது நியாயமல்ல.

பூசாவிலிருந்து வந்த நெடுங்கேணியைச் சேர்ந்த ஒரு பெண் இயக்கத்தால் பிடித்துச் செல்லப்பட்டு நான்கு மாதங்கள்தான். இவளுடைய பெயர் ஒரு முக்கியமான தளபதியின் பெயராகவும் இருந்தது. இவள் ஒரு விளையாட்டு வீராங்கனை. இவளை அந்தத் தளபதி என்று நினைத்துக் கொண்டு போயிருக்கிறார்கள்.மிகவும் பலவீனமாகி கதைக்கவும் பயந்து வருந்தினாள். வந்திருந்த மற்றவர்களோடு தான் இருக்கவில்லையாம். தனிச்சிறை என்றாள்.




Californian Redwood Forest
Great Ocean Road
Grand Ridge Road
Gippsland
அருகில் இருங்கள்,
அருகே செல்லுங்கள் .
விக்டோரியாவைப் பார்வையிடவும்
நீங்கள் ஒரு உலகமளவு தொலைவில் இருப்பதைப் போல உணர நீங்கள் இப்போது வெகுதூரம் செல்ல வேண்டியதில்லை. கூட்டத்தை விட்டு வெளியேறி உங்கள் இடத்தைக் கண்டுபிடித்தாலே போதுமானது. நீங்கள் இயற்கையுடன் மீண்டும் கலந்து, இயற்கைக்காட்சிகளில் திளைத்து மன நிம்மதியையும் அமைதியையும் பெற்றுக்கொள்வதற்கு சரியான இடம் இதுவேயாகும். நீங்கள் இங்கே ஒரு சிறந்த மதுவை அனுபவித்து மன மகிழ்வுடன் இருக்கலாம். அதற்காக மேலும் மேலும் விக்டோரியாவிற்கு அருகில் செல்லுங்கள்.
VISIT VICTORIA
visitvictoria.com


NS Systems
SECURITY
1300 108 555
REALTIME
SECURITY SYSTEM
PROTECTION
IP / HD CCTV Systems
Alarm Monitoring
Access Control
Video Intercom
Security Fog System
Smart Home
Data & Tele-communication
Security Alarm
Digital TV Antenna
Ducted Vacuum
Solar CCTV
UTECH SOLUTIONS
Corporate Group
Protect your Home & Family, Secure your Premises & Business.
1300 108 555 / 0447 533 555
www.nssystems.com.au / info@nssystems.com.au

Transco™ CARGO




ஒவ்வொரு வாரமும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஒரே நிறுவனம்

- ONLINE TRACKING
- SMS & EMAIL ARRIVAL NOTICE NOTIFICATION
- LIVE CHAT ON WEBSITE
- TRANSCO APP

*We love to deliver*

IF YOU MISS THE CUT-OFF THIS WEEK
YOU CAN SEND IT NEXT WEEK
IT'S AS EASY AS THAT

Weekly shipments exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield

206-208 Discovery Road
Dandenong South
(03) 9703 2255

45 Adrian Rd
Campbellfield
(03) 9357 7228

SYDNEY - 02 9897 0004
PERTH - 08 9452 7707
BRISBANE - 07 3219 0203
CANBERRA - 02 62821905
TASMANIA - 03 90174167
ADELAIDE - 08 8322 8825
DARWIN - 08 79790002

1300 1 TRANSCO (1300 187 267)
WWW.TRANSCOCARGO.COM.AU